
தினபூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 242 ஆடி 21
Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94
திருச்சி, புதன், ஆகஸ்ட் 06, 2025
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



## அமெரிக்காவுக்குச் செல்ல இனி ரூ.13 லட்சம் டெபாசிட்? விரைவில் அறிவிப்பு வருகிறது

....2-ம் பக்கம்

## டெல்லியில் பிரதமர் மோடியுடன் பிலிப்பைன்ஸ் அதிபர் சந்திப்பு: உறவை வலுப்படுத்த உறுதி

...3-ம் பக்கம்

## அவர் இருந்திருந்தால் சிறப்பு: கடைசி போட்டியில் பும்ராவை மிஸ் செய்தேன்: முகமது சிராஜ்

....6-ம் பக்கம்







● முதல்வர் மு.க.ஸ்டாலின், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரம்பூர், மார்க்கெட் தெருவிலுள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டிடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பொறியாளர்கள் உள்பட பல்வேறு பணியிடங்களுக்கு நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறை சார்பில்

# 2,538 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்குகிறார்

சென்னை, ஆக. 06-

**பொறியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்கு நகராட்சி நிர்வாகம்-குடிநீர் வழங்கல் துறை சார்பில் 2,538 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்குகிறார்.**

**வர்த்தக மையத்தில்....**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக உதவிப் பொறியாளர்கள், நகரமைப்பு அலுவலர்கள், இளநிலை பொறியாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்கு 2538 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். இவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் விழா நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறுகிறது. இந்த விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று தலைமை தாங்கி 2538 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

**வரவேற்பு அளிக்க...**

விழாவுக்கு அமைச்சர் கே.என்.நேரு முன்னிலை வகிக்கிறார். அரசு முதன்மை செயலாளர் முனைவர் கார்த்திகேயன் வரவேற்று பேசுகிறார். இதில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகள் பங்கேற்கின்றனர். இந்த விழாவுக்கு வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஏற்பாடு செய்துள்ளார்.

**அமைச்சர் அறிக்கை...**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் நகராட்சி நிர்வாக துறையில் 2538 இளைஞர்களுக்கு அரசு வேலைக்கான பணி நியமன ஆணைகளை வழங்க வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டோன்மென்ட் பட்ரோடு அண்ணா சிலை அருகே இன்று (புதன்கிழமை) காலை 9.30 மணிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. மேளதாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரமாண்ட வரவேற்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் கழக நிர்வாகிகள் பல்லாயிரக் கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் அறிக்கையில் கூறி உள்ளார்.

### புதிய போலீஸ் நிலையம், பள்ளிக்கட்டிடம் உள்ளிட்ட

## ரூ.28 கோடி மதிப்பில் நலத்திட்டங்கள்: முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

### ரூ.17.65 கோடி மதிப்பில் 14 புதிய திட்டப் பணிகளுக்கும் அடிக்கல்

சென்னை, ஆக. 06-

**கிளாம்பாக்கத்தில் புதிய போலீஸ் நிலையம், கொளத்தூரில் பள்ளிக்கட்டிடம் உள்ளிட்ட ரூ.28 கோடி மதிப்பிலான புதிய நலத்திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். மேலும், ரூ.17.65 கோடி மதிப்பிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.**

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில் 18.26 கோடி ரூபாய் செலவில் 30,000 சதுர அடி கட்டிட பரப்பளவில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கிளாம்பாக்கம் காவல் நிலையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இக்காவல் நிலையக் கட்டிடம், காவல் உதவி ஆணையர் மற்றும் ஆய்வாளர்கள் அறை, கட்டுபாட்டு அறை, கண்காணிப்பு அறை, கைதிகள் அறை, உணவருந்தும் அறை, ஆடவர் மற்றும் மகளிர் ஓய்வு அறை, பொதுமக்கள் கலந்தாய்வு கூடம், காத்திருப்புக் கூடம், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த பஸ் நிலையத்தில் தினசரி 2,500 பஸ்கள் இயக்கப்பட்டு, சாதாரண நாட்களில் 50 ஆயிரம் பயணிகளும், விடுமுறை மற்றும் பண்டிகை நாட்களில் சுமார் 2 லட்சம் பயணிகளும் பயன்படுத்துகின்றனர். பயணிகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இக்காவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

பெரம்பூர், மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சிங்கார சென்னை 2.0 மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், 9.74 கோடி ரூபாய் செலவில் 24,000 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்டு உள்ள கூடுதல் பள்ளிக்கட்டிடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து, வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், கழிப்பறைகள் போன்றவற்றை பார்வையிட்டார். மேலும், வகுப்பறைக்கு நேரில் சென்று மாணவியர்களுடன்

(கடைசி பக்கம் பார்க்க)

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

## ஆக. 14-ம் தேதி தமிழக அமைச்சரவை கூட்டம்

சென்னை, ஆக. 06-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வருகிற ஆக. 14 ஆம் தேதி தமிழக அமைச்சரவைக் கூட்டம் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவைக் கூட்டத்தில் அரசின் முக்கிய திட்டங்கள், தொழில் முதலீடுகளுக்கு ஒப்புதல் வழங்குவது குறித்து விவாதித்து முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது.**

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்தாண்டு நடைபெற உள்ளது. இந்நிலையில் இந்த ஆட்சி முடிவதற்குள் சில முக்கிய திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க தி.மு.க. அரசு முயற்சித்து வருகிறது. சமீபத்தில் இரு முக்கிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் வருகிற ஆக. 14 ஆம் தேதி(வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு தமிழக அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழக அரசின் அடுத்த கட்ட திட்டங்கள், தொழில் முதலீடுகளுக்கு ஒப்புதல் வழங்குவது குறித்து விவாதித்து முடிவு செய்யப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

### வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை

சென்னை, ஆக. 06-

**வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக்கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**





இதுகுறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது., முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்பேரில், சென்னை மாநகராட்சி பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தை தலைமைச் செயலகத்தில் நேற்று நடத்தினோம். சென்றாண்டு கனமழை நேரத்தின் போது கிடைத்த அனுபவங்கள், அவற்றின் அடிப்படையில் நடத்தப்பட்ட முந்தைய ஆய்வுக்கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின் நிலை குறித்து இக்கூட்டத்தில் கேட்டறிந்தோம்.

மழை நீர் வடிகால்களை சரி செய்வது - கால்வாய்களுக்கான நீர்வழிப்பாதைகளை சீரமைப்பது - முகத்துவாரம் மற்றும் கழிமுகப்பகுதிகளில் நீர் வெளியேறும் வண்ணம் அவற்றை ஆழப்படுத்துவது - சாலைகளை சரி செய்வது உள்ளிட்ட பணிகளின் நிலை குறித்து சென்னை மாநகராட்சி - நீர்வளத்துறை - நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

பருவமழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாக, அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து நிறைவு செய்திட வேண்டுமென அதிகாரிகளுக்கு உத்தரவிட்டோம். ஒருங்கிணைந்து செயல்பட்டு பருவமழை நேரத்தில் பாதிப்புகள் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம் என்று இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொண்டோம். என தெரிவித்தார்.

### உத்தராகண்ட்டில் மேக வெடிப்பு:

## திடீர் கனமழை-வெள்ளத்திற்கு 17 பேர் உயிரிழப்பு: பலர் மாயம்

டேராடூன், ஆக.06-

**உத்தராகண்ட் மாநிலம் உத்தரகாசியில் மேகவெடிப்பு காரணமாக கொட்டித் தீர்த்த கனமழையால், தாராலி பகுதியில் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டது. 17 பேர் உயிரிழந்தனர். 50 பேர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.**



உத்தராகண்ட் மாநிலம் உத்தரகாசியின் தாராலி பகுதியில் கீர் கங்கை நதி பகுதிகளில் மேகவெடிப்பு காரணமாக கனமழை கொட்டித் தீர்த்தது. இதனால், அந்தப் பகுதியில் பல காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டது. இதனால், அந்த பகுதிகளில் ஒரு சில வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. பல கட்டடங்களில் சேதம் ஏற்பட்டது. பல வீடுகள் தண்ணீர் சூழ்ந்து காணப்படுகின்றன. ஒரு சில இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டு உள்ளது.

இதில் 17 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 50க்கும் மேற்பட்டோர் சிக்கி உள்ளனர். தகவல் அறிந்த தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் அங்கு விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். காட்டாற்று வெள்ளம் ஏற்பட்ட வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி உள்ளது.

இது குறித்து தகவல் அறிந்ததும் மாநில முதல்வர் புஷ்கர் சிங் தமியிடம் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தொலைபேசி வாயிலாக கேட்டறிந்தார். மீட்புபணிகளில் உதவி செய்ய இந்தோ திபெத்திய எல்லை பாதுகாப்புப் படையைச் (ஐ.டி.பி.பி.) சேர்ந்த வீரர்கள் 16 பேர் கொண்ட குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர்.

பிரதமர் மோடி வெளியிட்ட அறிக்கையில் 'உத்தரகாசியின் தாராலியில் மேகவெடிப்பு காரணமாக உயிரிழந்த மக்களுக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன். இதனுடன் பாதிக்கப்பட்ட மக்கள் நல்வாழ்விற்கும் கடவுளை வேண்டிக் கொள்கிறேன். முதல்வர் புஷ்கர் தமியுடன் பேசி, அங்கு நிலவும் சூழ்நிலை குறித்து கேட்டறிந்தேன். மாநில அரசின் கண்காணிப்பின் கீழ், நிவாரணம் மற்றும் மீட்புப் படையினர் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர். மக்களுக்கு உதவ கிடைக்கும் எந்தவொரு வாய்ப்பையும் தவறவிட மாட்டோம்.' எனத் தெரிவித்துள்ளார்.

### கலைஞர் பல்கலைக்கழக மசோதா:

## ஜனாதிபதி ஒப்புதலுக்கு அனுப்பினார் கவர்னர்

சென்னை, ஆக. 06-


**கலைஞர் பல்கலைக்கழக மசோதாவில் கையெழுத்திட கவர்னர் மறுத்துவிட்டால், தமிழக அரசு கோர்ட்டை அணுகும் என அமைச்சர் கோவி செழியன் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில் கலைஞர் பல்கலைக்கழக மசோதாவை ஜனாதிபதி திரௌபதி முர்முவின் ஒப்புதலுக்கு தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி அனுப்பியுள்ளார்.**

தமிழகத்தின் கும்பகோணத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி பெயரில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவது என அரசால் முடிவு செய்யப்பட்டு, அதற்காக சட்டசபையில் கடந்த ஏப்ரல் மாதம் இறுதியில் கலைஞர் பல்கலைக்கழக மசோதா, தாக்கல் செய்யப்பட்டது. தமிழக உயர் கல்வி துறை அமைச்சர் கோவி செழியன் இதனை தாக்கல் செய்த நிலையில், அது ஒப்புதலுக்காக கவர்னர் ஆர்.என். ரவிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், அதில் அவர் கையெழுத்திடாத நிலையில், அதுபற்றி பேசிய அமைச்சர் கோவி செழியன், கையெழுத்திட கவர்னர் மறுத்து விட்டால், கோர்ட்டை அரசு அணுகும் என்றார்.


இதேபோன்று, கலைஞர் பல்கலைக்கழகத்திற்கு முதல்வர் மு.க. ஸ்டாலினை வேந்தராக்குவது மற்றும் வேந்தருக்கு உதவி அதிகாரியாக தமிழக உயர் கல்வித்துறை அமைச்சரை நியமிப்பது தொடர்பான மசோதாவும் கடந்த ஏப்ரலில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த சூழலில், கலைஞர் பல்கலைக்கழக மசோதாவை கவர்னர் ஆர். என். ரவி, ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -308.47 | -73.20 |
| பாயின்ட் 80,710.25 | பாயின்ட் 24,649.55 |



**தங்கம்**
1 சவரன் ₹74,960
1 கிராம் ₹9,370



**வெள்ளி**
1 கிலோ ₹125,000
1 கிராம் ₹125.00

**டாலர்** ₹87.82

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

# அமெரிக்காவுக்குச் செல்ல இனி ரூ.13 லட்சம் டெபாசிட்?
## விரைவில் அறிவிப்பு வருகிறது

**வாஷிங்டன், ஆக.06-**

அமெரிக்காவுக்குச் செல்ல இனி ரூ.13 லட்சம் டெபாசிட் செய்துதான் விசா பெற முடியும் என அறிவிப்பு வெளியாகிறது.

அமெரிக்காவில் விசா காலம் முடிந்தும், வெளிநாட்டினர் அதிக காலம் தங்குவதைத் தடுக்கும் வகையில், விசா பெறும்போது, இனி ரூ.13.17 லட்சத்துக்கு நுழைவு பத்திரங்களை அளிக்கும் விதிமுறையை அமெரிக்கா கொண்டுவரவிருக்கிறது.



உள்நாட்டுப் பாதுகாப்பு என்ற பெயரில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்த புதிய விதிமுறையை அறிமுகம் செய்துள்ளார். சில வெளிநாட்டுப் பயணிகள் தங்கள் விசா காலத்தை மீறி அமெரிக்காவில் தங்காமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, அவர்கள் ரூ.13.17 லட்சம் மதிப்புள்ள பத்திரங்களை டெபாசிட்டாக வழங்க வேண்டும் என்ற விதிமுறையைக் கொண்டு வர அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது. விசா காலத்தைத் தாண்டி தங்கியிருக்கும் மக்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இந்தப் புதிய திட்டம் ஒரு சோதனை முயற்சியாகக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க அரசு வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், அமெரிக்க தூதரக அதிகாரிகள், அமெரிக்காவில் விசா காலம் முடிந்தும் தங்கியிருப்பவர்களை அதிகம் கொண்ட நாட்டினருக்கு விசா வழங்கும் பரிசீலனையின்போது, இந்த விசா பத்திர விதிமுறையை பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது எந்தெந்த நாடுகளுக்குப் பொருந்தும், இந்தத் தொகை எதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் என்பது தொடர்பான விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

# கவின் படுகொலை வழக்கில் சுர்ஜித் தாய் ஆஜராக சம்மன்

**தூத்துக்குடி, ஆக.06-**

கவின் படுகொலை வழக்கில்,ஆகஸ்டு 15-ம் தேதிக்குள் சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் ஆஜராக சுர்ஜித்தின் தாய் கிருஷ்ணகுமாரிக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுக மங்கலம் பகுதியைச் சேர்ந்த பட்டியலின மென்பொருள் பொறியாளர் கவின் செல்வ கணேஷ். கடந்த 27ம் தேதி திருநெல்வேலி கே.டி.சி. நகரில் காதல் விவகாரத்தில் படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக கவின் காதலித்ததாக கூறப்படும் பெண்ணின் சகோதரர் சுர்ஜித், அவரது தந்தை சரவணன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கின் விசாரணையை சி.பி.சி.ஐ.டி.-க்கு மாற்றி தமிழக அரசு உத்தரவிட்டது. துணை காவல் சூப்பிரண்டு ராஜ்குமார் நவ்ரோஸ் தலைமையிலான அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சுர்ஜித்தின் நீதிமன்றக் காவல் முடிவடைந்த நிலையில், மேலும் சில நாட்களுக்கு காவல் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

கவினின் பெற்றோரை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் அழைத்து ஆறுதல் தெரிவித்தார். இந்நிலையில், கவின் படுகொலை வழக்கில்,ஆகஸ்டு 15-ம் தேதிக்குள் சி.பி.சி.ஐ.டி அலுவலகத்தில் ஆஜராக முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சுர்ஜித்தின் தாய் கிருஷ்ணகுமாரிக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரம்பூர், மார்க்கெட் தெருவிலுள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 9.74 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்து, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

## மெக்சிகோ சிறையில் கலவரம்:
# 7 பேர் அடித்துக்கொலை

**டக்ஸ்பான், ஆக. 06-**

மெக்சிகோவில் சிறையில் இரு குழுக்கள் இடையே ஏற்பட்ட கலவரத்தில் 7 கைதிகள் கொல்லப்பட்ட சம்பவம் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இது பற்றிய விவரம் வருமாறு;-

மெக்சிகோ நாட்டில் வெராக்ரூஸ் மாகாணத்தில் டக்ஸ்பன் சிறை உள்ளது. இந்த சிறையில் ஆயிரக்கணக்கான கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர். சிறையில், கைதிகளுக்கும், கிரிமினல் கும்பலான க்ரூபோ சோமப்ராவுக்கும் இடையே கலவரம் மூண்டது. க்ரூபோ சோமப்ரா கும்பலானது மற்ற கைதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை மிரட்டி பணம் பறிந்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த கலவரத்தின் போது இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் கடுமையாக தாக்கிக் கொண்டனர். சிறைச்சாலையின் உள்ளே கைதிகள் சிலர் தீ வைத்தனர்.

கலவரத்தில் சிக்கியவர்களில் 7 கைதிகள் கொல்லப்பட்டனர். 20க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். படுகாயம் அடைந்தவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். சிறையில் மூண்ட கலவரம் தொடர்பான வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

## செங்கோட்டைக்குள் நுழைய முயற்சி:
# வங்கதேசத்தினர் 5 பேர் கைது

**புதுடில்லி, ஆக. 06-**

டில்லி செங்கோட்டை வளாகத்திற்குள் நுழைய முயற்சி செய்த, வங்க தேசத்தினர் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

நாடு முழுவதும் வரும் ஆகஸ்ட் 15ம் தேதி சுதந்திர தினம் கொண்டாடப்பட உள்ளது. அந்த வகையில், அன்று டில்லி செங்கோட்டையில் பிரதமர் மோடி தேசியக் கொடி ஏற்றி, நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்துவார். இதற்கான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது. மறுபக்கம் பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சிகளும் நடந்து வருகிறது.

இந்த சூழலில், டில்லி செங்கோட்டை வளாகத்திற்குள் 5 பேர் நுழைய முயற்சி செய்தனர். அவர்களை மடக்கி பிடித்த போலீசார் விசாரணை நடத்தினர். அங்கு வங்கதேச நாட்டினர் என்பது தெரியவந்தது. தற்போது அவர்களை கைது செய்து, ஏதற்காக செங்கோட்டை வளாகத்திற்குள் நுழைய முயற்சி செய்தீர்கள் என்று போலீசார் பல்வேறு கோணத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இது குறித்து போலீசார் கூறியதாவது: அவர்கள் அனைவரின் 20 முதல் 25 வயதுடையவர்கள். அவர்கள் டில்லியில் கூலி தொழிலாளியாக பணி செய்து வருகின்றனர். அவர்களிடம் இருந்து வங்கதேச நாட்டின் ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. தற்போது அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அவர்கள் அனைவரும் சட்டவிரோத குடியேறிகள். அவர்கள் செங்கோட்டை வளாகத்திற்குள் வலுக்கட்டாயமாக நுழைய முயன்றனர். அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை தொடங்கப்பட உள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு செங்கோட்டையில் பாதுகாப்பு குறைபாடு ஏற்பட்டதாக கூறி போலீசார் 7 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். முன்னதாக, பாதுகாப்பு பயிற்சியின் ஒரு பகுதியாக செங்கோட்டை வளாகத்தில், சிறப்பு பிரிவு அதிகாரிகள் போலி வெடிகுண்டை மறைத்து வைத்து இருந்தனர். இதனை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த போலீசார் கண்டுபிடிக்க தவறிவிட்டனர். இதனால் உடனடி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# சத்யபால் மாலிக் மறைவு: தமிழக முதல்வர் இரங்கல்

**சென்னை, ஆக.06-**

ஜம்மு காஷ்மீரின் முன்னாள் கவர்னர் சத்யபால் மாலிக் மறைவுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் முன்னாள் கவர்னரான சத்யபால் மாலிக் உடல்நலக் குறைவால் காலமானார் என டெல்லி ராம் மனோகர் லோகியா மருத்துவமனை தெரிவித்துள்ளது. 2018- 19-ம் காலகட்டத்தில் ஜம்மு காஷ்மீர் கவர்னராக பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், சத்யபால் மாலிக் மறைவால் மிகவும் வருத்தமடைந்தேன். அமைதியின் ஊடாக உயர்ந்து, அதிகாரத்திற்கு உண்மையைப் பேசத் துணிந்த ஒரு மனிதர். அவர் வகித்த பதவிகளை மட்டுமல்ல, அவர் எடுத்த நிலைப்பாடுகளையும் வரலாறு நினைவில் வைத்திருக்கும் என தெரிவித்துள்ளார்.

# ஆணவக்கொலைகளை தடுக்க சட்டம்: திருமாவளவன் ஆர்ப்பாட்டம் அறிவிப்பு

**திருச்சி, ஆக.06-**

ஆணவக்கொலைகளை தடுக்க சட்டம் இயற்ற வலியுறுத்தி வருகிற 9, 11 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு தழுவிய அளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது என திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. திருச்சி விமான நிலையத்தில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:- நெல்லையில் நடந்த சம்பவம் போன்று தமிழகத்தில் பல பகுதிகள் மற்றும் மாநிலங்களிலும் அதிகரித்து வரும் ஆணவக்கொலைகளை தடுக்க தனி சட்டம் இயற்ற வேண்டும் வலியுறுத்தி வருகிறோம். பாராளுமன்றத்தில் இது குறித்து பேசியும், உள்துறை அமைச்சருக்கு கடிதமும் எழுதி உள்ளோம்.

உச்ச நீதிமன்றம் ஒரு வழக்கில் இதுபோன்ற கொலைகளை தடுப்பதற்கு உரிய வழிமுறைகளை வலியுறுத்தி தீர்ப்பளித்துள்ளது. இச்சூழலில் இச்சட்டம் இயற்றுவதற்கு மாநில அரசுகளுக்கும் பொறுப்பு, அதிகாரம் உள்ளது. முதல்வர் இது குறித்து ஏற்கனவே தேர்தல் வாக்குறுதியில் சட்டம் இயற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

தமிழக அரசு மற்ற மாநில அரசுகளுக்கு முன்மாதிரியாக இந்த சட்டத்தை இயற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுகிறோம். இதை வலியுறுத்தி வருகிற 9, 11 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு தழுவிய அளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. சென்னையில் 9-ந்தேதி நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் நான் பங்கேற்க உள்ளேன்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி இன்னும் கூட்டணியாகவே உருவாகவில்லை. அ.தி.மு.க., பா.ஜ.க. ஆகிய 2 கட்சிகள் இணைந்து இருக்கிறது, அவ்வளவுதான். அவர்களுக்கு இடையில் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. வட மாநிலத்தவர்கள் லட்சக்கணக்கில் தொழிலாளர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிற சூழலில் அவர்களை வாக்காளர்களாக சேர்ப்பதற்கு முயற்சிகள் நடப்பதாக வருவதாக தகவல்கள் வந்து கொண்டுள்ளது. இது குறித்து தீவிரமாக விவாதிக்க வேண்டிய தேவை இருக்கிறது. முதல்வர் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி இது தொடர்பாக விவாதிக்க வேண்டும்.

இவ்வாறு கூறினார்.

பேட்டியின் போது மாவட்டச் செயலாளர்கள் புல்லட் லாரன்ஸ், கனியமுதன், திருச்சி பாராளுமன்ற தொகுதி செயலாளர் தங்கதுரை, பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதி செயலாளர் கிட்டு ஆகியோர் உடன் இருந்தனர்.

## கச்சா எண்ணெய் விவகாரம்:
# அமெரிக்காவுக்கு இந்தியா பதிலடி

**மாஸ்கோ, ஆக. 06-**

இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவது அவசியமான நடவடிக்கை என அமெரிக்காவுக்க இந்தியா பதிலளித்துள்ளது.


ரஷ்ய தாக்குதலில் உக்ரைனில் எவ்வளவு மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி இந்தியாவுக்கு கவலை இல்லை. இதன் காரணமாக நான் இந்தியாவுக்கு எதிராக வரி விதிப்பை கணிசமான அளவில் உயர்த்த இருக்கிறேன் . ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்குவதால், இந்தியாவுக்கு வரிகளை மேலும் அதிகரிக்க போகிறேன்'' என்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

இந்நிலையில் இதுகுறித்து வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் பேசுகையில், இந்தியாவின் எரிசக்தி கொள்கை அதன் தேசிய நலன் மற்றும் உலக சந்தையின் நிர்ப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்டது.

இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவது அவசியமான நடவடிக்கை. உக்ரைன் போர் தொடங்கியபோது, இந்தியாவின் வழக்கமான எண்ணெய் சப்ளையர்கள் தங்கள் விநியோகங்களை ஐரோப்பாவிற்கு திருப்பிவிட்டனர். அத்தகைய சூழ்நிலையில், இந்தியாவுக்கு குறைந்த வாய்ப்புகள் இருந்தன. எனவே ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இது லாபம் ஈட்டும் உத்தி அல்ல, மாறாக பொதுவான இந்திய நுகர்வோருக்கு மலிவான மற்றும் தடையற்ற விநியோகத்தை வழங்குவதற்கான முன்னுரிமையாகும். இந்தியாவை விமர்சிக்கும் நாடுகள் தாங்களே ரஷ்யாவிடம் வணிகம் செய்கின்றன. அவர்களுக்கு அப்படி செய்வது கட்டாயம் அல்ல. ஆனால் அவர்கள் லாபத்திற்காக அவ்வாறு செய்கிறார்கள் என்பதுதான் ஒரே வித்தியாசம். மற்றவர்களை நோக்கி விரல் நீட்டுவதற்கு முன், அவர்கள் தங்கள் சொந்த நடத்தையைப் பார்க்க வேண்டும்'' என்று கூறினார்.

**06-08-2025**



**இன்றைய ராசி பலன்கள்**

**மேஷம்:-** சுற்று வட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். குழந்தைப் பேறு ஏற்படும். அவருக்கு என்னையா பெரிய ஆள் எனப் பெயர் பெறுவீர்கள். மனைவி மூலம் நன்மைகள் ஏற்படும்.

**ரிஷபம்:-** இன்று, நன்கு பழகியவர்களே மோசம் செய்வார். எனவே, எவரிடமும் எச்சரிக்கையாக இருக்கவும். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்க வேண்டிய நாள்.

**மிதுனம்:-** உங்கள் தீவிர செயல்பாடுகளால், வெற்றி எப்போதும் உங்கள் பக்கம்தான். அதன் காரணமாக சுயநம்பிக்கை அதிகரித்து, முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும். பயணங்கள் லாபம் தரும்.

**கடகம்:-** பழைய கதைகளைப் பேசி மகிழ நீண்ட நாள் நண்பர் சந்திப்பு வழிவகுக்கும். தன வருமானங்கள் அதிகரிப்பதோடு, விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும்.

**சிம்மம்:-** மனைவியின் ஆரோக்கியக் குறைவு காரணமாக மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். பயணத்தின் போது எச்சரிக்கையுடன் இருந்தால், இழப்பைத் தவிர்க்கலாம்.

**கன்னி:-** தன்னம்பிக்கை குறையும் நாள். மனம் அமைதி பெற புண்ணிய காரியம் ஈடுபாடு பெரிதும் உதவும். தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது.

**துலாம்:-** தனலாபம், குடும்பத்தில் நிம்மதி, சுகம் ஆகியவை அதிகரிக்கும். மனத்தெம்பும், மன மகிழ்ச்சியும் ஏற்படும். மனைவியின் பூரண ஒத்துழைப்பு மனமகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம்:-** தொழிலில் ஏற்படும் மந்த நிலை காரணமாக லாபம் குறையும். டி.வி, செல் போனில் விளையாடுவதை தவிர்த்து, கவனமாக படித்தால் மட்டும் கல்வியில் சிறக்க முடியும்.

**தனுசு:-** தனலாபம் ஏற்படும். புதிய வாகனம் வாங்க முயல்வீர்கள். அரசுப் பணியாளர்களுக்கு, எதிர்பார்த்த பதவி மற்றும் ஊதிய உயர்வுகள் கிடைக்கும் காலம் கனியும்.

**மகரம்:-** திட்டமிட்டபடி செய்ய இருந்த வேலைகளைத் தள்ளிப் போட வேண்டிய சூழ்நிலைகள் உருவாகலாம். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. குழப்பங்கள் தீர இன்று கோபத்தைக் குறைப்பது நல்லது.

**கும்பம்:-** பொருளாதார நிலை சீரும், சிறப்புமாக இருக்கும். காதில் தேன் வந்து பாயும் அளவுக்கு நல்ல சேதிகள் கிடைக்கும். சுபகாரியங்கள் மூலம் சுபச்செலவுகள் அதிகரிக்கும்.

**மீனம்:-** அரசிடம் இருந்து எதிர்பார்க்கும் உதவிகள் எந்தவித சிபாரிசும் இன்றி, உடனடியாக கிடைக்கும். தர்மகாரியம் ஈடுபாடு, ஆலயத் திருப்பணிகள் ஆகியவை ஏற்படும்.

## இந்தியா மீதான ட்ரம்ப் குற்றச்சாட்டு:
# சர்வதேச வர்த்தக ஆராய்ச்சி அமைப்பு மறுப்பு

**நியூயார்க், ஆக. 06-**

இந்தியா மீதான ட்ரம்பின் குற்றச்சாட்டு தவறானது சர்வதேச வர்த்தக ஆராய்ச்சி அமைப்பு அறிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், தங்கள் நாட்டுடன் உலக நாடுகள் வரி விதிப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். ஜூலை இறுதி வரை காலக்கெடு நிர்ணயித்திருந்தார். இந்த காலக்கெடுவுக்குள் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றால், அந்தந்த நாட்டில் இருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு வரி விதிக்கப்படும் என வலியுறுத்திருந்தார்.

அமெரிக்கா- இந்தியா இடையில் வர்த்தக ஒப்பந்தம் ஏற்படவில்லை. இதனால் 25 சதவீதம் வரி விதிக்கப்படுவதாக ட்ரம்ப் அறிவித்தார். அத்துடன் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது என அவர் எச்சரித்தார். ஆனால், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்தவில்லை. இந்த நிலையில், இந்தியா ரஷ்யாவிடம் இருந்து ரஷ்யா பணத்திற்கு அதிக அளவில் கச்சாய் எண்ணெய் மட்டும் வாங்கவில்லை. அதிக அளவில் எண்ணெய் கொள்முதல் செய்து, அதிக லாபத்திற்கு ஓபன் மார்க்கெட்டில் விற்பனை செய்து வருகிறது.

ரஷ்யா தாக்குதலில் உக்ரைனில் எவ்வளவு மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களுக்கு கவலை இல்லை. இதன் காரணமாக நான் இந்தியாவுக்கு எதிராக வரி விதிப்பை கணிசமான அளவில் உயர்த்த இருக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார். இந்நிலையில், ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்கி இந்தியா, பெரிய லாபத்திற்கு விற்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் குற்றம் சாட்டிய நிலையில், அது முற்றிலும் தவறானது என சர்வதேச வர்த்தக ஆராய்ச்சி அமைப்பான விளக்கம் அளித்துள்ளது. மேலும், ரஷ்யாவிடமிருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்தினால் உலகளவில் கச்சா எண்ணெய் விலை உயரும் என எச்சரிக்கை எனவும் தெரிவித்துள்ளது.

# சபரிமலை: தரிசன முன்பதிவுகள் தீவிரம்

**சபரிமலை, ஆக. 06-**

சபரிமலை அய்யப்பன் கோவில் 16-ம் தேதி நடை திறக்கப்படுவதையொட்டி தரிசனத்துக்காக பக்தர்கள் ஆன்லைனில் மும்முரமாக முன்பதிவு செய்து வருகின்றனர். சபரிமலை அய்யப்பன் கோவிலில் நிறைபுத்தரி பூஜைக்காக கடந்த 29-ம் தேதி நடை திறக்கப்பட்டது. பின்பு 30-ம் தேதி ஒரு நாள் சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது. இதில் புதிய நெற்கதிர்கள் ஆபரணப்பெட்டியில் வைத்து தலைச்சுமையாக சபரிமலைக்கு கொண்டு வரப்பட்டு சிறப்பு பூஜைகள் நடந்தன. பின்பு அவை பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்பட்டு நடை சாத்தப்பட்டது.

இந்நிலையில் மாதாந்திர பூஜைக்காக வரும் 16-ம் தேதி நடை திறக்கப்பட்டு 21-ம் தேதி வரை தொடர் வழிபாடு நடைபெற உள்ளது. இதற்கான ஆன்லைன் முன்பதிவுகள் சில தினங்களுக்கு முன்பு தொடங்கின. மண்டல, மகர விளக்கு பூஜை காலங்களில் நெரிசல் இருக்கும் என்பதால் பலரும் மாதாந்திர வழிபாடுகளில் பங்கேற்க ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் முன்பதிவுகள் மும்முரமாக நடக்கிறது.

# வங்கி கடன் மோசடி வழக்கில் அமலாக்கத்துறை விசாரணை: அனில் அம்பானி நேரில் ஆஜர்

**புதுடெல்லி, ஆக. 06-**

வங்கி கடன் மோசடி வழக்கில் நேற்று அமலாக்கத்து விசாரணை நடத்தியது. இதில் அனில் அம்பானி ஆஜரானார்.

பல ஆயிரம் வங்கிக் கடன் மோசடி வழக்கில் அமலாக்கத் துறை சம்மனை அடுத்து நேற்று அனில் அம்பானி விசாரணைக்கு ஆஜரானார். 66 வயதான அவர், டெல்லியில் உள்ள அமலாக்கத் துறையில் விசாரணைக்காக ஆஜரானார். இந்த வழக்கில் அவரது வாக்குமூலம் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் (பி.எம்.எல்.ஏ.) கீழ் பதிவு செய்யப்படும் என தகவல் கிடைத்துள்ளது. அமலாக்கத் துறையின் துணை மற்றும் இணை இயக்குனர்களின் மேற்பார்வையில் உதவி இயக்குனர் பொறுப்பில் உள்ள அதிகாரி, அனில் அம்பானியிடம் விசாரணை மேற்கொள்வதாக தகவல் கிடைத்துள்ளது.

வழக்கின் பின்னணி: லஞ்சம், பிணையற்ற கடன் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில், யெஸ் வங்கியில் வாங்கிய ரூ.3,000 கோடி கடனை தொழிலதிபர் அனில் அம்பானி சட்டவிரோதமாக மடைமாற்றம் செய்து மோசடியில் ஈடுபட்டதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் டெல்லியில் உள்ள அமலாக்கத் துறை தலைமையகத்தில் நேற்று அனில் அம்பானி நேரில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்க சம்மன் பிறப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ராமதாசின் தொலைபேசி ஹேக்: டி.எஸ்.பி. அலுவலகத்தில் புகார்

**சென்னை, ஆக. 06-**

பா.ம.க. நிறுவனர் ராமதாசின் தொலைபேசி வை-பை மூலம் சட்டவிரோதமாக ஹேக் செய்யப்பட்டதாக புகார் அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு கடலூர் மாவட்டம் விருத்தாசலத்தில் நடைபெற்ற கட்சியின் ஒருங்கிணைந்த பொதுக்குழு கூட்டத்தில் பேசிய ராமதாஸ், என் வீட்டிலேயே, நான் அமரும் நாற்காலிக்கு பக்கத்திலேயே யாரோ ஒட்டு கேட்பு கருவியை வைத்துள்ளனர். யார் வைத்தார்கள்?, எதற்காக வைத்தார்கள்? என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம் என்று கூறினார்.

இதையடுத்து ராமதாஸ், தந்தையை உளவு பார்த்த ஒரே மகன் அன்புமணி தான். தனது இல்லத்தில் ஒட்டுக்கேட்பு கருவி வைத்தது அன்புமணி தான் என்று குற்றம்சாட்டி இருந்தார்.

இந்நிலையில் வை-பை மூலம் சட்டவிரோதமாக ராமதாசின் தொலைபேசி ஹேக் செய்யப்பட்டதாக புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஹேக் செய்தவர்கள் மீது நடவடிக்கை கோரி கோட்டக்குப்பம் டி.எஸ்.பி. அலுவலகத்தில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் ராமதாஸ் இல்லத்தில் வைபை மற்றும் சிசிடிவி பொருத்தப்பட்டது. அன்புமணி மேலாளர் சசிகுமார் மூலமாகவே ராமதாஸ் இல்லத்தில் வைபை, சிசிடிவி பொருத்தப்பட்டுள்ளது. 2 ஆண்டுகளாக ராமதாசின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

# பொள்ளாச்சி நகராட்சியை கண்டித்து அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம் அறிவிப்பு



**சென்னை, ஆக.06-**

பொள்ளாச்சி நகராட்சி நிர்வாகத்தை கண்டித்து அ.தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பொள்ளாச்சி நகராட்சியில் நிலவி வரும் பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகளால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தொடர்ந்து புகார் தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

அனைத்து வார்டுகளிலும் வளர்ச்சிப் பணிகள் நடைபெறுவதில்லை. பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நிறைவடைந்து மூன்று ஆண்டுகள் ஆகியும் இதுவரை பயன்பாட்டிற்கு வரவில்லை. குடிநீர் சீராக விநியோகிக்கப்படுவதில்லை; தெரு விளக்குகள் முறையாக பராமரிக்கப்படுவதில்லை; குப்பைகள் அகற்றப்படுவதில்லை. இதனால் மக்கள் மிகுந்த சிரமப்படுகின்றனர்.

பொள்ளாச்சி நகராட்சியில் நிலவி வரும் பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகளை கண்டித்தும், மக்களின் அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், அ.தி.மு.க. பொள்ளாச்சி நகரத்தின் சார்பில், 13.8.2025 (புதன் கிழமை) காலை 10 மணியளவில், பொள்ளாச்சி நகராட்சி அலுவலகம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், அ.தி.மு.க. தேர்தல் பிரிவுச் செயலாளரும், திருப்பூர் மாநகர் மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான முனைவர் பொள்ளாச்சி வி. ஜெயராமன் தலைமையில் நடைபெறும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பீகாரில் நடத்த திட்டமிட்டிருந்த ராகுலின் யாத்திரை ஒத்திவைப்பு

**பாட்னா, ஆக.06-**

பீகாரில் ராகுல் காந்தி, தேஜஸ்வி யாதவ் இணைந்து ஆகஸ்ட் 10 ஆம் தேதி தொடங்க திட்டமிட்டிருந்த 'வோட் அதிகார் யாத்திரை' ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் ஷிபு சோரனின் மரணம் இந்த ஒத்திவைப்புக்கு முக்கிய காரணமாக இருக்கும் என சொல்லப்படுகிறது.

இந்த நடைபயணத்துக்கான புதிய தேதி குறித்த அறிவிப்பு உரிய நேரத்தில் வெளியாகும் எனவும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முந்தைய திட்டத்தின்படி, 'வோட் அதிகார் யாத்திரை'-யின் முதல் கட்டப் பயணம் ஆகஸ்ட் 10 ஆம் தேதி ரோஹ்தாஸ் மாவட்டத்தில் உள்ள சசாரத்தில் தொடங்கி பல்வேறு மாவட்டங்கள் வழியாக ஆகஸ்ட் 19 ஆம் தேதி அராரியா மாவட்டத்தில் உள்ள நர்பட்கஞ்சில் முடிவடையும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

காங்கிரஸ் மற்றும் ஆர்.ஜே.டி. இணைந்து ஏற்பாடு செய்த இந்த யாத்திரை, தேர்தல் ஆணையத்தின் சர்ச்சைக்குரிய சிறப்பு தீவிர திருத்தம் (SIR) நடைமுறைக்கு எதிரான நேரடி போராட்டமாகவும் திட்டமிடப்பட்டது.

இந்த யாத்திரையின் போது மத்திய அரசு மற்றும் பீகாரின் நிதிஷ் குமார் அரசாங்கத்தையும் எதிர்த்து பிரச்சாரம் செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

# டெல்லியில் பிரதமர் மோடியுடன் பிலிப்பைன்ஸ் அதிபர் சந்திப்பு

## இருதரப்பு உறவை வலுப்படுத்த உறுதி



**புதுடெல்லி, ஆக.06-**

பிலிப்பைன்ஸ் அதிபர் பெர்னாண்ட் மார்கோஸ் ஜூனியர், பிரதமர் நரேந்திர மோடியை டெல்லியில் நேற்று சந்தித்துப் பேசினார்.

5 நாள் பயணமாக நேற்று முன்தினம் புதுடெல்லி வந்த பெர்னாண்ட் மார்கோஸ் ஜூனியருக்கு நேற்று காலை குடியரசு தலைவர் மாளிகையில் அரசுமுறை வரவேற்பு அளிக்கப்பட்டது. இதையடுத்து, ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பெர்னாண்ட் மார்கோஸ் ஜூனியர் பேச்சுவார்த்தை நடத்தினார். இதில், இரு தரப்பு உறவை மூலோபாய கூட்டாண்மையாக உயர்த்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தியா- பிலிப்பைன்ஸ் இடையே தூதரக உறவு ஏற்பட்டதன் 75வது ஆண்டை நினைவுகூரும் வகையில், சிறப்பு தபால் தலையை இரு தலைவர்களும் வெளியிட்டனர்.

இதனை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே கலாச்சாரம், பாதுகாப்பு, விண்வெளி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்து ஆகின.

இதையடுத்து, தலைவர்கள் இருவரும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "இந்தியா - பிலிப்பைன்ஸ் உறவை மூலோபாய கூட்டாண்மை நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த முடிவு உரிய பலனை அளிப்பதற்கான விரிவான செயல் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது. இந்தியாவிற்கும், பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிற்கும் இடையே நேரடி விமான சேவை தொடங்கப்படும் என தெரிவித்தார்.

# ரூ.75 ஆயிரத்தை நெருங்கிய ஒரு சவரன் தங்கம் விலை..!

**சென்னை, ஆக. 06-**

ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (ஆகஸ்ட் 5) பவுன் ஒன்றுக்கு ரூ.600 என அதிகரித்து ஒரு பவுன் ரூ.74,960-க்கு விற்பனையானது.

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உள்ளிட்டவை தங்கத்தின் விலையை நிர்ணயிப்பதில் முக்கிய காரணிகளாக உள்ளன. கடந்த ஜனவரி மாத தொடக்கத்தில் ஒரு பவுன் தங்கம் ரூ.58 ஆயிரமாக இருந்தது. பின்னர் தங்கம் விலை படிப்படியாக உயர்ந்தது.

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கும் நடைமுறை குறித்த அந்த நாட்டு அதிபர் டொனால்டு ட்ரம்ப்பின் அறிவிப்புக்கு பின்னர் தங்கம் விலை உயர்ந்துள்ளது கவனிக்கத்தக்கது. அதோடு இந்தியா மீதான வரி விதிப்பை அதிகரிக்கக்கூடும் என அவர் எச்சரித்துள்ளார். இந்நிலையில், தங்கம் விலை தொடர்ந்து அதிகரித்து வருவது சாமானிய மக்களை சங்கடம் கொள்ள செய்துள்ளது.

ஆக.2 (சனிக்கிழமை) முதல் தங்கம் விலை உயர்ந்து வருகிறது. அன்று கிராம் ஒன்றுக்கு ரூ.140 என விலை உயர்ந்தது. அதற்கு அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை விலையில் மாற்றமின்றி தங்கம் விற்பனையானது. நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) கிராமுக்கு ரூ.5 என விலை உயர்ந்தது. இந்த சூழலில் நேற்று (ஆக.5) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.75 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.9,370-க்கு விற்பனையானது. அதேபோல் பவுனுக்கு ரூ.600 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.74,960-க்கு விற்பனையானது.

24 காரட் தங்கத்தின் விலையும் நேற்று கிராமுக்கு ரூ.82 உயர்ந்து ஒரு கிராம் ரூ.10,222-க்கு விற்பனையானது. 18 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.65 என விலை உயர்ந்து ஒரு கிராம் ரூ.7,745-க்கு விற்பனையானது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.2 அதிகரித்து ஒரு கிராம் ரூ.125-க்கு விற்பனையானது.

## சீனா ஆக்கிரமிப்பு குறித்த பேச்சு:

# ராகுலுக்கு இந்தியா கூட்டணி ஆதரவு



**புதுடில்லி, ஆக.06-**

சீனா ஆக்கிரமிப்பு குறித்த ராகுல் காந்தியின் பேச்சுக்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், டில்லியில் நடைபெற்ற இன்டியா கூட்டணி எம்.பி.க்கள் கூட்டத்தில் அவருக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

இந்திய - சீன எல்லையில் 2,000 சதுர கிலோமீட்டர் இந்திய நிலத்தை சீனா ஆக்கிரமித்துவிட்டதாக கடந்த 2022ல் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பேசியதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் மேல்முறையீட்டு மனு நேற்று முன்தினம் உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதி தீபங்கர் தத்தா 'இந்தியப் பகுதியை சீனா ஆக்கிரமித்தது உங்களுக்கு எப்படித் தெரியும்? ஆதாரங்கள் உள்ளதா? ஒரு உண்மையான இந்தியர் என்றால் நீங்கள்(ராகுல்) இப்படி பேசியிருக்கமாட்டீர்கள்?' என்று சரமாரியாக கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில் நேற்று (ஆக. 5) காலை மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்டியா கூட்டணி எம்.பி.க்கள் சந்திப்பு நடைபெற்றது. இதில் ராகுல் காந்தி, கார்கே, ஜெயராம் ரமேஷ், கனிமொழி, திருச்சி சிவா, சுப்ரியா சுலே உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் எம்.பி.க்கள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் ராகுல் காந்திக்கு இன்டியா கூட்டணி எம்.பி.க்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். காங்கிரஸ் தனது எக்ஸ் பக்கத்தில் இதுபற்றி, "அரசியல் கட்சிகளின் ஜனநாயக உரிமைகள் குறித்து தேவையற்ற ஒரு கருத்தை தற்போது பதவியில் உள்ள நீதிபதிகள் கூறியுள்ளதாக இன்டியா கூட்டணி எம்.பி.க்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

தேசிய நலன் சார்ந்த பிரச்னைகள் குறித்து கருத்து தெரிவிப்பது அரசியல் கட்சிகளின் குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவரின் பொறுப்பாகும். நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்க அரசு இவ்வளவு அழகாக தவறும்போது எல்லைகளை காக்க அவர்களை பொறுப்பேற்க வைப்பது ஒவ்வொரு குடிமகனின் தார்மீகக் கடமையாகும்" என்று பதிவிட்டுள்ளது.

## சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறார்:

# ராகுல் மீது பிரதமர் மோடி சாடல்

**புதுடில்லி, ஆக.06-**

சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறார் என தேசிய ஜனநாயக கூட்டணி பார்லி., குழு கூட்டத்தில் பிரதமர் மோடி ராகுலை கடுமையாக சாடினார்.

டில்லியில் தே.ஜ., கூட்டணி பார்லி., குழு கூட்டம் நடந்தது. கூட்டத்தில் பங்கேற்ற, பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பாகிஸ்தானில் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக இந்தியா மேற்கொண்டுள்ள ராணுவ நடவடிக்கையான 'ஆப்பரேஷன் சிந்தூர்' குறித்து பிரதமர் மோடி விளக்கம் அளித்தார்.

அப்போது பிரதமர் மோடி பேசியதாவது: ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து எதிர்க்கட்சிகள் கேள்விகளை எழுப்புவதன் மூலம் தங்களைத் தாங்களே காயப்படுத்திக் கொள்கிறார்கள்.

இதுபோன்ற விவாதங்களை அவர்கள் மேலும் கோர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அவற்றை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வோம்.

முழு நாடும் அவர்களின் நடத்தையைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. நாம் ஏன் அவர்களைத் தடுக்க வேண்டும்? அவர் (ராகுல்) எதையாவது சொல்லிக்கொண்டே இருப்பார். அடிக்கடி சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறார்.

உச்ச நீதிமன்றம் கூட அவரைக் கண்டித்துள்ளது. அவர்களின் குழந்தைத்தனத்தை முழு நாடும் பார்த்துவிட்டது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார். இந்த கூட்டத்தில் ஆப்பரேஷன் சிந்தூர் குறித்தும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## நெல்லை கவின் கொலை வழக்கு:

# 8 வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு

**மதுரை, ஆக. 06-**

கவின் கொலை வழக்கின் விசாரணை அறிக்கையை 8 வாரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சி.பி.சி.ஐ.டி.க்கு மதுரை உயர் நீதிமன்ற கிளை உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுக மங்கலம் பகுதியைச் சேர்ந்த பட்டியலின மென்பொருள் பொறியாளர் கவின் செல்வ கணேஷ். கடந்த 27ம் தேதி திருநெல்வேலி கே.டி.சி. நகரில் காதல் விவகாரத்தில் படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக கவின் காதலித்ததாக கூறப்படும் பெண்ணின் சகோதரர் சுர்ஜித், அவரது தந்தை சரவணன் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கவின் கொலை வழக்கு தொடர்பாக தூத்துக்குடியைச் சேர்ந்த காந்திமதி நாதன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தார். அதில், கவின் கொலை வழக்கு விசாரணை நெல்லை மாவட்ட நீதிபதி கண்காணிப்பில் நடைபெறவும், கவின் குடும்பத்துக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்கவும், காதல் விவகாரத்தில் கொலைகள் நடைபெறுவதை தடுக்க சிறப்பு சட்டம் நிறைவேற்றவும் உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தார். இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஏ.டி.மரிய கிளாட் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அரசு சார்பில் கூடுதல் அட்வகேட் ஜெனரல் அஜ்மல்கான், மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஐ.பினேகாஸ் ஆகியோர் வாதிட்டனர்.

இதையடுத்து வாதங்களை கேட்ட நீதிபதிகள், கவின் கொலை வழக்கின் விசாரணை அறிக்கையை சி.பி.சி.ஐ.டி. போலீஸார் 8 வாரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை பாரபட்சம் இல்லாமலும், ஒருதலை பட்சமாக இல்லாமலும் நடைபெற வேண்டும். காதல் விவகாரக் கொலைகளை தடுக்க சிறப்பு சட்டம் கொண்டு வருவது தொடர்பாக இறுதி விசாரணையின் போது முடிவெடுக்கப்படும்" என்று நீதிபதிகள் உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

## அஜித்குமார் கொலை வழக்கு:

# 5 போலீஸ்காரர்களுக்கு 2 நாட்கள் சி.பி.ஐ. காவல்

**மதுரை, ஆக.06-**

மடப்புரம் அஜித்குமார் கொலை வழக்கில் கைதாகியுள்ள 5 போலீஸ்காரர்களை 2 நாட்கள் சி.பி.ஐ. காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கினார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் உள்ள மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவில் காவலாளி அஜித்குமார் (வயது 27) என்பவரை நகை திருட்டு புகார் தொடர்பாக சிறப்பு தனிப்படை பிரிவை சேர்ந்த போலீஸ்காரர்கள் சட்ட விரோதமாக அழைத்து சென்று விசாரணை என்ற பெயரில் அடித்து கொலை செய்தனர்.

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவம் தொடர்பாக தனிப்படை போலீஸ்காரரர்கள் கண்ணன், பிரபு, ஆனந்த், ராஜா, சங்கரமணிகண்டன் ஆகிய 5 பேர் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். அஜித்குமார் கொலை வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

இந்த நிலையில் அஜித்குமாரை விசாரணைக்கு அழைத்து சென்று தாக்கி கைதாகி சிறையில் உள்ள 5 போலீஸ்காரரர்களிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ. முடிவு செய்தது. இதற்காக அவர்களை காவலில் எடுக்க சி.பி.ஐ. தரப்பில் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. சிறையில் உள்ள 5 போலீஸ்காரர்களும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டனர். வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட்டு செல்வபாண்டி, கைதாகியுள்ள 5 போலீஸ்காரர்களுக்கு நேற்றும், இன்றும் என 2 நாட்கள் சி.பி.ஐ. காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கினார். இன்று மாலை 5.30 மணிக்கு மீண்டும் 5 போலீஸ்காரர்களை ஆஜர்படுத்த வேண்டும் என சி.பி.ஐ. அதிகாரிகளுக்கு நீதிபதி உத்தரவிட்டார். இதனை தொடர்ந்து 5 பேரையும் விசாரணைக்காக சி.பி.ஐ. அதிகாரிகள் அழைத்து சென்றனர்.

# மதுரை ஆதீனம் மனுவுக்கு பதிலளிக்க காவல் துறைக்கு ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, ஆக.06-**

தனக்கு எதிரான வழக்கை ரத்து செய்யக் கோரி மதுரை ஆதீனம் தாக்கல் செய்த மனுவுக்கு பதிலளிக்க காவல் துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை அருகில் உள்ள காட்டாங்குளத்தூரில் கடந்த மே மாதம் நடந்த சைவ சித்தாந்த மாநாட்டில் பங்கேற்க வந்த மதுரை ஆதினத்தின் கார் மீது மற்றொரு கார் மோதிவிட்டு நிற்காமல் சென்றது. இதுகுறித்து மாநாட்டில் பேசிய மதுரை ஆதீனம், தன்னை கொலை செய்ய சதி நடந்துள்ளது என்று கூறியிருந்தார்.

இவரது பேச்சு இரு மதத்தினருக்கு இடையே குழப்பத்தையும், மோதலையும் உருவாக்கும் வகையில் இருப்பதாக கூறி சென்னையை சேர்ந்த வழக்கறிஞர் ராஜேந்திரன் அளித்த புகாரின் அடிப்படையில், ஆதீனத்துக்கு எதிராக சைபர் க்ரைம் போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி, மதுரை ஆதீனம் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு, நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி முன் விசாரணைக்கு வந்த போது, காவல் துறை தரப்பில், ஆதீனத்தின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து அளிக்கப்பட்ட புகார்கள் மீது வழக்குகள் பதியப்பட்டுள்ளன. மதுரை, கோவை போன்ற இடங்களில் போராட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. மத நல்லிணக்கத்துக்கு எதிராக தேவையில்லாமல் ஆதீனம் பேசியுள்ளார். இந்த மனுவுக்கு பதிலளிக்க அவகாசம் வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, ஆதீனத்தின் மனுவுக்கு பதிலளிக்க காவல் துறைக்கு உத்தரவிட்டு, விசாரணையை ஆகஸ்ட் 14 ஆம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

# மதுரையில் வரும் 21-ம் தேதி த.வெ.க. மாநில மாநாடு: விஜய்

**சென்னை, ஆக.06-**

மதுரையில் வரும் 21-ம் தேதி த.வெ.க. மாநில மாநாடு நடத்த அனுமதி கோரி காவல் துறையில் மனு அளிக்கப்பட்டுள்ளது. விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநாடு, விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலை கிராமத்தில் கடந்த ஆண்டு நடந்தது. இந்த நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் 2-வது மாநில மாநாடு மதுரையில் வருகிற 25-ந் தேதி நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதையொட்டி மதுரை-தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலை எலியார்பத்தி சுங்கச்சாவடி பகுதி அருகே உள்ள பாரபத்தி பகுதியில் மாநாட்டிற்கான பூமி பூஜை நடந்தது. தொடர்ந்து கட்சி நிர்வாகிகள், மாநாட்டிற்கு அனுமதி பெறுவதற்காக மதுரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்திற்கு வந்து போலீஸ் சூப்பிரண்டு அர்விந்தை சந்தித்து மனு அளித்தனர். மேலும், மாநாட்டிற்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் அறிவுறுத்தி இருந்தார்.

இதனையடுத்து போலீஸ் தரப்பில், மாநாடு நடைபெறும் 25-ந்தேதியை தொடர்ந்து 27-ந்தேதி விநாயகர் சதுர்த்தி வர இருப்பதாகவும், அதற்கு போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டியதிருப்பதால், மாநாடு நடைபெறும் தேதியை மாற்றி அமைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதற்கு புஸ்சி ஆனந்த் தரப்பில், கட்சி தலைமையிடம் கேட்டு முடிவு செய்கிறோம் என கூறிவிட்டு சென்றனர். இதனால், தமிழக வெற்றிக் கழகத்தின் மாநாடு குறிப்பிட்ட அந்த தேதியில் நடைபெறுமா? அல்லது தேதி மா ற்றப்படுமா? என்ற கேள்வி எழுந்தது. இந்த நிலை யில், மதுரையில் வரும் 21-ம் தேதி மாநில மாநாடு நடத்த அனுமதி கோரி த.வெ.க. சார்பில் காவல்துறையில் மனு அளிக்கப்பட்டுள்ளது. நிர்ணயித்த தேதிக்கு முன்பாகவே மாநாடு நடக்க இருப்பதால், மாநாட்டு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. மேலும், கட்சி நிர்வாகிகள் சமூக வலைதளங்களில் மாநாட்டுக்கான தேதி அறிவிப்பை பகிர்ந்து வருகின்றனர்.

# 20 சதவீதம் எத்தனால் கலந்த பெட்ரோல்: வதந்திகளுக்கு மத்திய அரசு விளக்கம்

**புதுடில்லி, ஆக.06-**

பெட்ரோலில் 20 சதவீதம் எத்தனால் கலப்பதால் கார்களில் மைலேஜ் குறைகிறது என்று சமூக வலைதளங்களில் பரவிய வதந்தியை மத்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

பெட்ரோலில் 20 சதவீதம் எத்தனால் கலப்பதால் கார்களில் மைலேஜ் குறைவாக கிடைப்பதாகவும், இன்ஜின்கள் மற்றும் பெட்ரோல் டேங்குகளில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், சமூக வலை தளங்களில் வதந்திகள் பரவின.

இந்த தகவல்களை மத்திய அரசு திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

இது குறித்து மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பெட்ரோலில் 20 சதவீதம் எத்தனால் கலப்பதால் கார்களில் மைலேஜ் பாதிக்கிறது என்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் அறிவியல் பூர்வமாக நிரூபிக்கபடவில்லை. இதனால் எரிபொருள் செயல்திறனில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

ஈ20 எரிபொருள் செயல்திறனை கடுமையாக குறைக்கிறது என்ற குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது. ஈ10க்கு வடிவமைக்கப்பட்டு ஈ20க்கு மாற்றம் செய்யப்பட்ட வாகனங்களில் மைலேஜ் 1 முதல் 2 % மட்டுமே குறையக்கூடும், மற்ற வாகனங்களில் 3-6% வரை குறையக்கூடும்.

இன்ஜினில் சரியான மைலேஜ் டியூனிங் செய்தும், சிறந்த உபகரணங்கள் பயன்படுத்தியும் இதைத் தடுக்கலாம்.

இதனை ஆட்டோமொபைல் உற்பத்தியாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்வாறு மத்திய அரசு அறிக்கையில் கூறியுள்ளது.

# மணிப்பூரில் ஜனாதிபதி ஆட்சி நீட்டிப்பு: மாநிலங்களவை ஒப்புதல்

**புதுடெல்லி, ஆக.06-**

மணிப்பூரில் ஜனாதிபதி ஆட்சியை நீட்டிக்கும் தீர்மானத்திற்கு மாநிலங்களவை ஒப்புதல் வழங்கியுள்ளது. கலவரத்தால் பாதிக்கப்பட்ட மணிப்பூரில் கடந்த பிப்ரவரி 13-ம் தேதி ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது. இதற்கு பாராளுமன்றம் ஏப்ரல் 2-ம் தேதி ஒப்புதல் அளித்தது. இந்த ஒப்புதலுக்கான காலக்கெடு ஆகஸ்டு 13-ம் தேதியுடன் நிறைவடைகிறது. இதற்கிடையே, 6 மாதத்துக்கு ஜனாதிபதி ஆட்சியை நீட்டிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்நிலையில், மணிப்பூரில் மேலும் 6 மாதங்களுக்கு ஜனாதிபதி ஆட்சியை நீட்டிக்க மாநிலங்களவையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்த தீர்மானத்துக்கு அவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மணிப்பூர் மாநிலத்தில் முழுமையாக அமைதி திரும்பி இருக்கிறது. நிரந்தர அமைதியை ஏற்படுத்த இனக்குழுக்கள் இடையே பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் நடந்து வருகிறது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தி.மு.க. அரசுக்கு 50-க்கு 50 வைத்துக் கொள்ளுங்கள். ஆணவக் கொலைக்கு அடிப்படையே ஜாதிதான். எத்தனை பெரியாரும், எத்தனை பாரதியாரும் வந்து சொன்னாலும் இங்கு ஜாதி வெறி இன்னும் மறையவில்லை. ஒட்டுமொத்த மக்களின் மனநிலை மாறினால்தான் இது மாறும்.

- பிரேமலதா



அவை செயல்பாடுகளுக்கு இடையூறு அளிப்பது ஜனநாயகத்திற்கு எதிரானது. நான் எதிர்க்கட்சியாக பல வருடங்கள் இருந்துள்ளேன். இதனால் எதிர்க்கட்சிகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என என்னிடம் பயிற்சி எடுங்கள். ஏனென்றால், அடுத்த 40 வருடத்திற்கு காங்கிரஸ் உள்ளிட்டவை எதிர்க்கட்சியாகத்தான் இருக்கப் போகிறது.

- ஜே.பி. நட்டா



சட்டமன்றத்தில் சாதி ஆணவக்கொலைகள் குறித்து விவாதித்த பொழுது தற்போதுள்ள சட்டங்களை போதுமானது. புதிய சட்டங்கள் தேவையில்லை என முதல்வர் தெரிவித்தார். ஆனால், தமிழகத்தில் அடுத்தடுத்து நடைபெறக் கூடிய சாதி ஆணவக் கொலைகள் தமிழகத்திற்கு தனி சட்டம் தேவை என்பதை தான் வலிறுத்துகிறது.

- சண்முகம்



அரசியலுக்கு வந்துள்ள விஜய் என்ன மாறுபட்ட கொள்கையை வைத்துள்ளார். அண்ணா வழியில் அரசியல் என்றால்? ஸ்டாலின், எடப்பாடி அவர்கள் என்ன வழியில் போய் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அண்ணா வழியில் போய் கொண்டு இருக்கிறார்கள். நான் எங்கள் அண்ணன் வழியில் போய் கொண்டு இருக்கிறேன்.

- சீமான்

# புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு புதிய திட்டப்பணிகள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்



**புதுக்கோட்டை,ஆக.06-**

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (05.08.2025) பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின் மாற்றியினை துவக்கி வைத்தார்.

பின்னர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் கிராமப்புறங்களின் அடிப்படைத் தேவைகளான, குடிநீர் வசதி, சுகாதார வசதி, சாலை வசதி, மின் வசதி உள்ளிட்டவைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றையதினம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டைவிடுதி ஊராட்சியில், நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.43.32 லட்சம் மதிப்பீட்டில், கணேஷ் நகர் சாலை முதல் புதுக்கோட்டைவிடுதி வரை புதிய தார் சாலை அமைக்கும் பணியினையும், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கோவிலூர் ஊராட்சியில், ரூ.39.02 லட்சம் மதிப்பீட்டில் கோவிலூர் ஆதிதிராவிடர் குடியிருப்பு முதல் மேற்கு மேலக்கோட்டை வரை உள்ள சாலையினையும் மற்றும் மாங்காடு ஊராட்சியில், ரூ.26.91 லட்சம் மதிப்பீட்டில் உசிலங்கொல்லை சோம்பியத்தெரு இணைப்பு சாலையினையும் தார் சாலைகளாக அமைக்கும் பணியினையும், மாஞ்சான்விடுதி ஊராட்சியில், நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.55.92 லட்சம் மதிப்பீட்டில் மணியம்பலம் முதல் மாஞ்சான்விடுதி வரை புதிய தார் சாலை அமைக்கும் பணியினை, கீழாத்தூர் ஊராட்சியில், நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.68.83 லட்சம் மதிப்பீட்டில் ஆலங்குடி அணவயல் சாலை முதல் கீழாத்தூர் ஜீவா நகர் வரை புதிய தார் சாலை அமைக்கும் பணியினை இன்றையதினம் அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகள் அனைத்தையும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டது

. மேலும், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டைவிடுதி ஊராட்சி, எம்.ஜி.ஆர் நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின் மாற்றி பொதுமக்கள், விவசாயிகளின் பயன்பாட்டிற்காக இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழக அரசின் மூலம் கிராமப்புறங்களின் வளர்ச்சிக்காக செயல்படுத்தப்படும் இத்தகைய வளர்ச்சித் திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார். பின்னர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மறமடக்கி ஊராட்சி, அரசு மேல்நிலைப்பள்ளியில் 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு சிறப்பு கையேடுகளை இன்றையதினம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில், திருவரங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முத்துராமன், ரமேஷ், வட்டாட்சியர்கள் பி.வில்லியம் மோசஸ் (ஆலங்குடி), க.கருப்பையா (அறந்தாங்கி), மற்றும் தங்கமணி, சண்முகநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர்; கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.3.87 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகள்

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டினார்



**பெரம்பலூர்,ஆக.06-**

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அல்லிநகரம், கீழமாத்தூர், இலந்தங்குழி, ஆதனூர், வரகுபாடி, அயினாபுரம், கொளக்காநத்தம், சில்லக்குடி ஆகிய ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் (05.08.2025) கலெக்டர் ச.அருண்ராஜ் தலைமையில், ரூ.3.87 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வுகளில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் தரும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில் கிராமப்புறங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப் பேற்ற தி லி ருந்து ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், மக்களின் தேவைகளை உணர்ந்து, அவற்றை திட்டங்களாக வழங்கி வருகின்றார். ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் கீழமாத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ.34 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு புதிய வகுப்பறைகள் கட்டடம் கட்டும் பணி, இலந்தங்குழி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ரூ.17 லட்சம் மதிப்பீட்டில் புதிய மற்றும் கூடுதல் ஒரு வகுப்பறை கட்டடம் கட்டும் பணி, ஆதனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூ.34 லட்சம் மதிப்பீட்டில் புதிய மற்றும் கூடுதல் இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டும் பணி, நபார்டு திட்டத்தின் கீழ் வரகுபாடி பகுதியில் ரூ.125.20 லட்சம் மதிப்பீட்டில் காரை - வரகுபாடி தார் சாலையை மேம்படுத்தும் பணி, சில்லக்குடி பகுதியில்ரூ.74.10 லட்சம் மதிப்பீட்டில் சில்லக்குடி - கல்லகம் செல்லும் தார் சாலையை மேம்படுத்தும் பணி, 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் சில்லக்குடி ஊராட்சி மேத்தால் கிராமத்தில், ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணி என மொத்தம் ரூ.3.29 கோடி மதிப்பீட்டில் 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அனைத்து பணிகளும் குறித்த காலத்திற்குள் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அல்லிநகரம் ஊராட்சியில் ரூ.11.78 லட்சம் மதிப்பீட்டில் குழந்தைகள் நலமையக் கட்டடம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ் கீழ் அயினாபுரம் ஊராட்சியில் ரூ.29.70 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் மற்றும் கொளக்காநத்தம் ஊராட்சி இருளர் தெருவில் ரூ.16.45 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட குழந்தைகள் நல மையக் கட்டிடம் என மொத்தம் ரூ.57.93 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 3 புதிய திட்டப்பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதுபோன்று கடந்த நான்காண்டுகளில் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில், எண்ணற்ற வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

இந் நி கழ் வு க ளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், முன்னாள் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழு பெருந்தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி, அட்மா தலைவர் வீ.ஜெகதீசன்,ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயபால், பிரேமலதா, ஆலத்தூர் வட்டாட்சியர் முத்துக்குமரன். ஆலத்தூர் வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பூமா, மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# முதல்வரின் காலை உணவுத் திட்டம் குறித்த கூட்டம் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது





**தஞ்சாவூர்,ஆக.06-**

முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட கண்காணிப்புக் குழுவின் மாவட்ட அளவிலான மாதாந்திர கூட்டம் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் (04.08.2025) அன்று நடைபெற்றது.

முதல்வரின் காலை உணவு திட்டத்தில் வழங்கப்படும் உணவு பாதுகாப்பானதாகவும், தரமானதாகவும் வழங்குவதை அலுவலர்கள் தொடர் ஆய்வின் வழி கண்காணித்திட வேண்டும் எனவும், மைய பொறுப்பாளர்கள் வருகை, உணவுப்பொருட்கள் இருப்பு பதிவேடுகள் பாரமரிப்பு ஆகியவற்றை ஆய்வு செய்ய வேண்டுமெனவும், முக்கியமாக காலவாதியான பொருட்கள் இருப்பில் உள்ளதா என்பதை கண்டறிந்து உடன் அதனை மாற்றம் செய்திடவும் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், அவர்களால் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) பொன்னியின் செல்வன், உதவி மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், இணை பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்கள், மாநகராட்சி, நகராட்சி அலுவலர்கள், அனைத்து ஊராட்சி ஒன்றிய துணை வடடார வளர்ச்சி அலுவலர்கள் (சத்துணவு), தன்னார்வ தொண்டு நிறுவனம் மற்றும் அனைத்து மகளிர் திட்ட வட்டார இயக்க மேலாளர்கள் போன்ற பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருச்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்



**திருச்சி,ஆக.06-**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, எடத்தெரு பழைய கோவில் மண்டபத்தில் (05.08.2025) பள்ளிகல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமினை துவக்கி வைத்து, பொது மக் க ளி ட மி ருந்து பெறப்படும் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் தங்களுடைய கோரிக்கை மனுக்களை அளித்து தீர்வு காணும் வகையில் 6 இடங்களில் முகாம்கள் நடைபெற்றது. இம்முகாம்களின் வாயிலாக நகர்புறத்திற்கு 13 துறைகள் மூலமாக 43 சேவைகளும், ஊரகத்திற்கு 15 துறைகள் மூலமாக 46 சேவைகளும் வழங்கப்படும் வகையில் இம்முகாம்கள் நடைபெற்று வருகிறது.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின்கீழ், பழைய கோவிலில் நடைபெற்ற முகாமில் 895 கோரிக்கை மனுக்களும், துறையூர் நகராட்சிக்குட்பட்ட செங்குந்தர் துவக்கப் பள்ளியில் நடைபெற்ற முகாமில் 194 கோரிக்கை மனுக்களும், இலால்குடி வட்டம், புள்ளம்பாடி பேரூராட்சி, கருப்பண்ண சுவாமி கோவிலில் நடைபெற்ற முகாமில் 552 கோரிக்கை மனுக்களும், தாளக்குடி யுடீஞ மண்டபத்தில் நடைபெற்ற முகாமில் 260 கோரிக்கை மனுக்களும், முசிறி வட்டம், தண்டலைப் புத்தூர் பாலாஜி திருமண மண்டபத்தில் நடைபெற்ற முகாமில் 541 கோரிக்கை மனுக்களும், தொட்டியம் வட்டம், முருங்கை, ஸ்ரீ நாச்சியம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற முகாமில் 526 கோரிக்கை மனுக்களும் என மொத்தம் பொதுமக்களிடமிருந்து பல்வேறு துறைகளின் சார்பில் 2968 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், மாநகராட்சி துணை மேயர் ஜி.திவ்யா, திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் அருள், அரசுத் துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அரியலூர் அரசு மருத்துவமனையில் உலக தாய்ப்பால் வார விழா கொண்டாட்டம்



**அரியலூர்,ஆக.06-**

அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவனை குழந்தைகள் நலப் பிரிவில், ரோட்டரி சங்கம் சார்பில் உலகதாய்ப்பால் வார விழா செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு, ரோட்டரி சங்கத் தலைவர் கருணாநிதி தலைமை வகித்தார். செயலர் பிரபு சங்கர் முன்னிலை வகித்தார். அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துமனை அலுவலர் கொளஞ்சிநாதன் கலந்து கொண்டு பேசுகையில், மாறிவரும் சமுதாயச் சூழலில் தாய்ப்பால் கொடுப்பதில் தாய்மார்கள் பல்வேறு சங்கடங்களை சமாளிக்க வேண்டியுள்ளது. ஆனாலும் தாய்மார்கள் தங்களது குழந்தைகளுக்கு தாய்ப்பால்களை கொடுப்பதில் இருந்து தவறவிடக் கூடாது. குழந்தைகளுக்கு குறைந்தப்பட்ச 2 வயது வரையும் அதன் பின்னரும் தாய்ப்பாலை கொடுக்க வேண்டும். அதில் முதல் ஆறு மாதங்கள் தாயப்பாலை மட்டும் கொடுக்க வேண்டும். ஆறுமாதம் முடிந்தவுடன் ஏழாம் மாதத்தில் இருந்து தாய்ப்பாலுடன் வீட்டு உணவுகளைப் படிப்படியாக கொடுக்க வேண்டும். எந்த செயற்கை உணவுகளும் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவை இல்லை. தாய்ப்பாலில் கிடைக்கின்ற சத்தாண உணவு வேறு எதிலும் கிடையாது என்றார். பின்னர் அவர், தாய்மார்களுக்கு சத்தாணவு உணவு பெட்டகங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மருத்துவர்கள் சரவணன், ராதாகிருஷ்ணன், அறிவுச்செல்வன் மற்றும் செவிலியர்கள், ரோட்டரி சங்க உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் நகராட்சி மற்றும் திருமருகல் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



**நாகப்பட்டினம்,ஆக.06-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ் டா லின் 15.7.2025அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில், மக்களின் குறைகளை வீட்டிற்கே சென்று கேட்டறிந்து தீர்வு காணும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ், ஜீலை 15-ஆம் தேதி முதல் நவம்பர் 2025 வரை மாநிலம் முழுவதும் 10,000 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தார். இத்திட்டத்தில், அனைத்து மாவட்டங்களிலும் முதற்கட்டமாக 3563 முகாம்கள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டம் 13ஆம் நாளாக வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்- 6,7,9 ஆகிய பகுதிகளுக்கு வேதாரண்யம் தனியார் திருமண மண்டபத்திலும், திருமருகல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புத்தகரம், ஆதலையூர் ஆகிய ஊராட்சியில் உள்ள பகுதிகளுக்கு திருமருகல் ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியிலும் நடைபெற்றது.

இன்றைய தினம் வேதாரண்யம் நகராட்சி மற்றும் திருமருகல் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் சுமார் 740 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன.

மேலும், வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு வேதாரண்யம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் தோட்டக்கலைத்துறை சார்பில் பயனாளிகளுக்கு காய்கறி விதைகளை வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர்; , வேதாரண்யம் நகர்மன்ற தலைவர் ஆகியோர் வழங்கினார். நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியம் இராதாமங்கலம், இலுப்பூர், வடக்காலத்தூர், பட்டமங்கலம் ஆகிய ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு இராதாமங்கலம் சமுதாய கூடத்திலும், கீழையூர் ஊராட்சிக்குட்பட்ட திருப்பூண்டி கிழக்கு, திருப்பூண்டி மேற்கு ஆகிய பகுதிகளுக்கு திருப்பூண்டி மேற்கு அரசு மேல்நிலைப் பள்ளியிலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நாளை (06.08.2025) நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் வேதாரண்யம் நகர்மன்ற தலைவர் மா.மீ.புகழேந்தி , வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர் எஸ்.திருமால் , வேதாரண்யம் நகராட்சி ஆணையர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கந்தர்வக்கோட்டை அருகே அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் இலக்கிய மன்ற போட்டிகள்



**புதுக்கோட்டை,ஆக.06-**

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி நடுநிலை பள்ளியில் மன்ற செயல்பாடுகள் மூலம் தமிழ், ஆங்கிலம் இலக்கிய மன்ற போட்டிகள் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமையாசிரியர் தமிழ்செல்வி தலைமை வகித்தார்.

ஆங்கில ஆசிரியர் சிந்தியா அனைவரையும் வரவேற்றார்.அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். ஆறு ,ஏழு வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு கட்டுரை எழுதுதல் என்ற தலைப்பில் வேற்றுமையில் ஒற்றுமை, நட்பை கொண்டாடுவோம் நம்பிக்கையை போற்றுவோம், அமைதிக்கு பாதை அமைப்போம். எட்டாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு நாட்டின் முன்னேற்றம், பாலின சமத்துவம், சமூக உறவை ஒற்றுமையாக வளர்ப்போம், நாட்டின் விடுதலையில் அமைதியின் பங்கு,

என்ற தலைப்புகளின் கட்டுரை போட்டியும், ஆறு,ஏழு வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு பெரியாரை போற்றும் ஒன்றாய் உயர்வும், சம வாய்ப்பு உருவாக்குதல், கலை வளர்க்கும் தமிழ்நாடு, எட்டாம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு இணைவோம் உயர்வோம், இளையோரின் ஆற்றல் சமூகத்தின் உயர்வு , இயற்கை பேரிடரில் ஒற்றுமை உள்ளிட்ட தலைப்புகளில் பேச்சுப் போட்டியும், கவிதை எழுதுதல் என்ற தலைப்பில் நட்பை அழகு, ஒற்றுமை வலிமை, அனைவருக்கும் சமத்துவம், சமத்துவத்தை வளர்ப்போம், ஈதலும் இரக்கமும், உழைப்பால் உயர்வோம் என்ற தலைப்பில் நடைபெற்றது. இதே போல் ஆங்கிலத்திலும் இலக்கிய மன்ற போட்டிகள் நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டது.இலக்கிய மன்ற போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் வட்டார அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்கின்றனர்.கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை, கணினி ஆய்வக உதவியாளர் தையல் நாயகி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திருமருகல் அருகே புத்தகரம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம்



**நாகப்பட்டினம்,ஆக.06-**

திருமருகல் ஒன்றியம் புத்தகரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் செவ்வாய் கிழமை நடைபெற்றது.

முகாமில் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் மாவட்ட மாற்றுத்திறனாளி துறை அலுவலர் கார்த்திகேயன் வட்டாட்சியர் நீலாதாட்சி சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் பிரான்சிஸ், வட்ட வழங்கல் அலுவலர் ரகு ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை வாங்கி தொடங்கி வைத்தனர். முகாமில் புத்தகரம், ஆதலையூர் ஊராட்சிகளை சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு மகளிர் உரிமைத் தொகை தொடர்பாக 373 - மனுக்களையும் வருவாய் துறை தொடர்பாக 222 - மனுக்களையும் ஊராக வளர்ச்சி துறை தொடர்பாக 24 - மனுக்களையும் இதர துறை தொடர்பாக 241 மனுக்களையும் அளித்தனர்.மொத்தம் 860 மனுக்கள் பெறப்பட்டது. முகாமில் திருமருகல் திருமருகல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணன், சுப்ரமணியன் (கிராம ஊராட்சி) ஆத்மா திட்ட தலைவர் செல்வ செங்குட்டுவன் திருமருகல் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.டி.எஸ்.சரவணன் வருவாய் ஆய்வாளர் குமுதா மற்றும் அரசு அலுவலர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டத்தில், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்
## கலெக்டர் வ.மோகனச்சந்திரன் வழங்கினார்



**திருவாரூர்,ஆக.06-**
திருவாரூர் மாவட்டத்தில், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் முகாம்; நடைபெற்று வருவதை கலெக்டர் வ.மோகனச்சந்திரன், , தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரிய கழகத்தலைவர் என்.இளையராஜா , திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து ஆகியோர் பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

திருவாரூர் மாவட்டத்தில், உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் அக்டோபர் மாதம் வரை நகர்புறப்பகுதிகளில் 54 முகாம்களும், ஊரகப் பகுதிகளில் 131 முகாம்களும் என மொத்தம் 185 முகாம்கள் நடைபெறும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப்பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப்பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படும். "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின்கீழ், தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்கள், அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள், சேவைகளை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தினையும் வழங்கியுள்ளனர்.

அதனடிப்படையில், அட்டவணைப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட நாட்களில் பொதுமக்கள் தொடர்புடைய முகாம்களில் கலந்து கொள்ளலாம்.

மேலும், இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை கலெக்டர் நேரில் பார்வையிட்டு, உங்களுடன் ஸ்டாலின் முகாமில் காலையில் பெறப்பட்ட மனுக்களின் அடிப்படையில், உடனுக்குடன் தீர்வு காணப்பட்டு வருவாய்துறையின் சார்பில் 01 பயனாளிக்கு சொத்து வரியில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஆணையும், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 01 பயனாளிக்கு வீட்டு வரி ரசீதும், வேளாண்மை-உழவர் நலத்துறையின் சார்பில் 03 பயனாளிகளுக்கு வேளாண் இடுபொருட்களையும் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) நெடுஞ்சாலை (திட்டங்கள்) அருண்சத்யா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர் சங்கர், உதவி ஆணையர் (கலால்) ரவிச்சந்திரன், மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் யோகேஸ்வரன், மன்னார்குடி நகர் மன்றத் தலைவர் மன்னை.த.சோழராஜன், நகராட்சி ஆணையர் சியாமளா, நகராட்சி மேலாளர் மன்சூர், முத்துப்பேட்டை பேரூராட்சி தலைவர் மும்தாஜ் நவாஸ் கான், திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் பரமேஸ்வரி, மன்னார்குடி, முத்துப்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து துறை அரசு உயர் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம்
## கலெக்டர் பொ.ரத்தினசாமி நேரில் பார்வையிட்டார்



**அரியலூர்,ஆக.06-**
அரியலூர் மாவட்டம், வரதாஜன்பேட்டை பேரூராட்சி மற்றும் காமரசவல்லி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம்கள் நடைபெறுவதை கலெக்டர் பொ.இரத்தினசாமி, (05.08.2025) நேரில் பார்வையிட்டார்.

அதன்படி வரதராஜன்பேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட 1,2,3,4,5,6,7 மற்றும் 10 ஆகிய வார்டுகளை ஒருங்கிணைத்து வரதராஜன்பேட்டை பெதேல் மஹாலிலும், திருமானூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட காமரசவல்லி, கோமான், குருவாடி மற்றும் தூத்தூர் ஆகிய ஊராட்சிகளை ஒருங்கிணைத்து காமரசவல்லி T.S.A திருமண மண்டபத்திலும் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை கலெக்டர் நேரில் பார்வையிட்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். மேலும், பொது மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் உடனடியாக கணினியில் பதிவேற்றம் செய்யப்படுதல், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் வழங்கப்படும் சேவைகள் குறித்து பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகள், முகாம்களுக்கு வருகை தரும் பொது மக்களின் உடல்நலனை பேணும் வகையில், மருத்துவ சேவைகள் அளிக்கப்படுவதையும் கலெக்டர் பொ.இரத்தினசாமி, பார்வையிட்டார்.

நடைபெற்ற முகாமில் மொத்தம் 1425 மனுக்கள் பெறப்பட்டது. மேற்படி மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய தீர்வு காணப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், 06.08.2025 அன்று செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அசாவீரன்குடிகாடு, மணப்பத்தூர் மற்றும் பெரியாக்குறிச்சி ஆகிய ஊராட்சிகளை ஒருங்கிணைத்து அசவீரான்குடிகாடு A.V.R. திருமண மஹாலிலும், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அய்யப்பநாயக்கன்பேட்டை, வங்குடி மற்றும் படைநிலை ஆகிய ஊராட்சிகளை ஒருங்கிணைத்து அய்யப்பநாயக்கன் பேட்டை மலர் மண்டபத்திலும், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அணிக்குதிச்சான் மற்றும் கூவத்தூர் ஆகிய ஊராட்சிகளை ஒருங்கிணைத்து கூவத்தூர் ஆரோக்கிய அன்னை வணிக வளாகத்திலும் உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடைபெறவுள்ளது. இம்முகாம் குறித்த விபரங்களை பொதுமக்களுக்கு முறையாக தெரிவிப்பதற்காக தன்னார்வலர்கள் 28.07.2025 அன்று முதல் வீடு வீடாகச் சென்று விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடு வழங்கி முகாம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, மேற்கண்ட பகுதிகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்களில் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் பொ.இரத்தினசாமி, தெரிவித்துள்ளார்.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் கோவிந்தராஜ், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, மாவட்ட நிலை அலுவலர்கள், இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**நகை ஏல அறிவிப்பு**

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, ஆக்கூர் திருமுல்லைவாசல், எண்.4/42-A, நேரு வீதி "மருதர் பேங்கர்ஸ்" நகை அடகு கடையில் 01.01.2020 முதல் 28.06.2023 வரை உள்ள அடகு வைக்கப்பட்டு காலம் கடந்தும் மீட்கப்படாதிருக்கும் தங்கம், வெள்ளி மற்றும் உள்ள வகையறாக்களை சீர்காழி RDO அவர்களின் KDIS No.1157/2025/A-4 உத்தரவுப்படி 21.08.2025 காலை 10.00 மணி முதல் என்னால் பகிரங்க ஏலம் விடப்படும். இந்த அறிவிப்பு நகை அடகு வைத்தவர்களுக்கும், இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் வெளிநாடு சென்றவர்களுக்கும் பொருந்தும்.

**M.ரவிச்சந்திரன்,**
**மாவட்ட ஏலதாரர்,**
**2A, பெரிய தைக்கால் தெரு,**
**மயிலாடுதுறை.**

**வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மயிலாடுதுறை.**

ரவி, த/பெ.சிவலிங்கம்,
மேலத் தெரு,
உளுத்துக்குப்பை கிராமம்,
மயிலாடுதுறை வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம்.
– மனுதாரர்

வருவாய் கோட்டாசியர்,
மயிலாடுதுறை.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது மகள் செல்வி சிங்காரி த/பெ.ரவி என்பவருக்கு பிறப்பு சான்று வேண்டல். மேற்படி விலாசத்தில் கடந்த 23 06 1998 ஆண்டு மேற்படி விலாசத்தில் பிறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

**மனுதாரர்: சி.ரவி,**
**உளுத்துக்குப்பை கிராமம்,**
**மயிலாடுதுறை வட்டம்.**

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within THREE Months thereafter. I, **AARTHI. S.V,** D/o. **SARAVANAN,** Aged 23 Permanently residing at door No. **270/5, Bharathidasan street, Perambur - anjal, Perambur, Thiruvarur, Tamil Nadu - 614 404** intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104.Those who have any valid Objections may notify the same to the Bar Council within 10 days.

**AARTHI. S.V**



**அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் வேர்களைத் தேடி என்னும் திட்டத்தின் கீழ் பிரான்ஸ், ஜெர்மன், மலேசியா, கனடா, மியான்மர், இலங்கை, பிஜி, தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட 14 நாடுகளை சேர்ந்த சுமார் 100 அயலக தமிழர்களின் வாரிசுதாரர்கள் தஞ்சாவூர் மாவட்டம் அரண்மனை வளாக கலைக்கூடம் வருகை புரிந்தவர்களுக்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.**




கும்பகோணம் அருகே திருபுவனம் கீழசாலையில் உள்ள ஸ்ரீமான் ரா.ம.லெ.ர நாராயணசாமி நாயுடு தர்ம சத்திரத்தில் அவருடைய 89ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நேற்று நாராயணசாமி நாயுடு வகையறா மூத்த தலைவரான லட்சுமிநாராயணன் தலைமையில் 200க்கு மேற்பட்ட நபர்களுக்கு அன்னதானம் மற்றும் நீர்மோர் பானகம் வழங்கப்பட்டது.

# பெரம்பலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி
## பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்



**பெரம்பலூர்,ஆக.06-**
பெரம்பலூர் மாவட்டம், மேலப்புலியூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களை விளக்கும் வகையில் (05.08.2025) புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.

தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் பொதுமக்களுக்கு சென்று சேர்க்கும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தினந்தோறும் கிராம ஊராட்சிகளில் வீடியோ படக்காட்சிகள் நடத்துதல், பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் தமிழக அரசின் திட்டங்களை விளக்கும் வகையிலும், தமிழ்நாடு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், கலெக்டர், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட அரசு விழாக்களின் தொகுப்புகளை சிறு புகைப்படக் கண்காட்சிகளாகவும் நடத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் தமிழக அரசின் திட்டங்களை விளக்கும் வகையிலான புகைப்படக் கண்காட்சி மேலப்புலியூர் ஊராட்சியில் நடத்தப்பட்டது.

இக்கண்காட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் , அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கிய நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள், பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் கலெக்டர், சட்டமன்ற உறுப்பினர்கள், கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கிய புகைப்படங்கள் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தன. இந்த புகைப்படக் கண்காட்சியினை சுமார் 400-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஆர்வமுடன் பார்த்துச் சென்றனர். பார்வையிட்டவர்களுக்கு தமிழக அரசின் சிறப்பு திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

# சென்னையில் இன்று மின்தடை ஏற்படும் இடங்கள்

**சென்னை ஆக 06-**
சென்னையில் பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின் தடை செய்யப்படுகிறது. காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் தடை செய்யப்படும். பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

அந்த வகையில், நாளை மின் தடை செய்யப்படும் பகுதிகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதன்படி, சென்னையில் இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக பின்வரும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். அதன்படி,

ரெட்ஹில்ஸ்: ஈஸ்வரன் நகர், பெருமாள் நகர், பம்மதுகுளம் காலனி, இந்திரா நகர், சோலையம்மன் நகர், காந்தி நகர்.

திருமுல்லைவாயல்: பாண்டிஸ்வரம், மாகறல், கொமக்கம்பேடு, காரணை, தாமரைபாக்கம், கொடுவேலி, வேளச்சேரி, கர்லபாக்கம், கடவூர், ஆரம்பாக்கம்.

பல்லாவரம் டிவிசன்: காமாட்சி நகர், தேவராஜ் நகர், பசும்பொன் நகர், பாலாஜி நகர், திருநகர், பத்மநாப நகர், லட்சுமி நகர், எல் ஆர் ராஜமாணிக்கம் சாலை, அண்ணா சாலை 7 முதல் 15-வது தெருவரை, சிக்னல் அலுவலம் ரோடு, காந்தி ரோடு, கலைஞர் ரோடு, செந்தமிர் சாலை, ஸ்ரீனிவாசன் நகர், திருமலை நகர், ஆதம் நகர் 1 முதல் 9-வது தெருவரை, சங்கர் நகர் கிழக்கு மெயின் ரோடு, வெங்கடேஷ் வரா நகர் மெயின் ரோடு, எம்ஜி ஆர் நகர், கஸ்தூரிபாய் நகர், பாரதி நகர், பொன்னுரங்கம் நகர், ECTV நகர், சித்திரை நகர், எம்ஜி ஆர் தெரு, திருநீர்மலை மெயின் ரோடு, டிஎஸ் லட்சுமி நாராயண நகர், பஜனை கோவில் தெரு.பொழிச்சலூர்: திரு நகர், பத்மநாப நகர், ஞான மணிநகர், பவானி நகர், பிசிஎஸ் காலணி, ராஜேஸ்வரி நகர், பஜனை கோவில் தெரு, பிரேம் நகர், லட்சுமி நகர், மூகாம்பிகை நகர், விநாயகா நகர், சண்முகா நகர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at
Manimaran Printers
No. 1 Santhanapuram,
Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam,
Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



**திருவொற்றியூர் மண்டலம் 7 வது வட்டத்திற்கு உட்பட்ட ராஜாஜி நகர் வஉசி தெரு மக்களின் கோரிக்கை ஏற்று குறுக்கு தெருக்களில் குடிநீர் பொது குழாய் புதிதாக அமைக்கும் பணியினைஅதிமுகமாமன்றஉறுப்பினர்டாக்டர்கே.கார்த்திக் ஆய்வுசெய்தார் அவருடன் வட்ட செயலாளர் எம்.கண்ணன், முன்னாள் வட்ட செயலாளர் எஸ். ஸ்டிபன், சுப்பிரமணியம், அரவிந்த் கலந்துகொண்டனர்.**

# கருணாநிதி பிறந்தநாள் பேச்சு போட்டியில் குருஞானசம்மந்தர் மிஷின் மெட்ரிக் மேல்நிலைபள்ளி முதலிடம்
## தருமை குருமணிகள் ஆசி



**மயிலாடுதுறை,ஆக.06-**
மயிலாடுதுறை யில்தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சிதுறையின் சார்பில் நடைபெற்றபேச்சுப் போட்டியில் மாவட்டத்தில் வெற்றி பெற்ற மாணவியைப் பாராட்டி தருமை ஆதினம் 27ஆவது குருமஹா சந்நிதானம் அருளாசி

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சி துறையின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி பிறந்தநாளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டத்தில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கான பேச்சுப் போட்டியானது தியாகி நாராயணசாமி ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் நடைப்பெற்றது.இப்போட்டியில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ளஅனைத்து பள்ளிகளிலிருந்தும் மாணாக்கர்கள் திரளாக கலந்து கொண்டனர்.இப்போட்டியில் குருஞானசம்பந்தர் மிஷன் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பில் பயிலும் மாணவி மு.மானிஷா கலந்து கொண்டு மாவட்ட அளவில் முதல் இடம் பெற்று ரூபாய் ஐந்தாயிரம் (5000)காசோலையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் தமிழ்வளர்ச்சி துறையின் சார்பாகப் பெற்றார். இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவியையும் அதற்கு உறுதுணையாக இருந்த ஆசிரியப் பெருமக்களையும் ஆட்சி மன்ற குழுதலைவர் ஸ்ரீமத் சிவகுருநாத தம்பிரான் சுவாமிகள்,துணை தலைவர்கள் முருகேசன்,ஞானசேகரன்,செயலர்,நிர்வாகச் செயலர் பாஸ்கரன்,பொருளாளர் சுப்ரமணியன்,முதல்வர் சரவணன் மற்றும் பொறுப்பாசிரியர்கள் அனைவரையும் பள்ளியின் புரவலர் தருமை ஆதீனம் 27-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நேரில் அழைத்து பாராட்டி அருளாசி வழங்கினார்.



**போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் சிறப்பாக செயல்பட்டு 7 பேரை கைது செய்து சுமார் ரூ.1 கோடி மதிப்புள்ள போதைபொருட்களை பறிமுதல் செய்த தெற்கு மண்டல காவல் ஆய்வாளர் எம்.ஜானி செல்லப்பா தலைமையிலானபோலீசாரைகூடுதல்கமிஷ்னர்விஜயேந்திர பிதாரி பாராட்டி வெகுமதி வழங்கினார்.**

# மீனம்பாக்கம் பகுதியில் கத்தியுடன் சுற்றிய வாலிபர் கைது

**சென்னை ஆக 06-**
சென்னை மீனம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் மீனம்பாக்கம் ஜி.எஸ்.டி. சாலையில் கண்காணித்து அங்கு கத்தியுடன்சுற்றிய நபர்களை மடக்கிப்பிடிக்க முயன்ற போது, அவர்கள் போலீசாரை அவதூறாக பேசி, பணி செய்யவிடாமல் தடுத்து மிரட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றனர். இது குறித்து மீனம்பாக்கம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

மீனம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் தொடர்புடைய எதிரி சஹாஜ் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து ஒரு கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி சஹாஜ் கல்லூரியில் படித்து வருவது தெரியவந்தது. மேற்படி வழக்கில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகளை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர். கைது செய்யப்பட்ட எதிரி சஹாஜ், சிறையில் அடைக்கப்பட்டார்.

**தமிழ்நாடு அரசு**
**ஆரணி பேரூராட்சி, திருவள்ளூர் மாவட்டம்**
**15வது நிதிக்குழு தேசிய சுகாதார மான்ய திட்டம் 2025–2026**

**ந.க.எண்.104/2025/அ1** **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** **நாள்: 01.08.2025**

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி பேரூராட்சியில் 2025-2026ஆம் ஆண்டில் **15வது நிதிக்குழு தேசிய சுகாதார மான்ய திட்டத்தின்** கீழ் **ரூ.75.00 இலட்சம்** மதிப்பீட்டில் ஆரணி பேரூராட்சி வார்டு எண்.3 பஜார் தெருவில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுதல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து **20.08.2025 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை** (அலுவலக கடிகாரப்படி) இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ-டெண்டரிங் முறையில் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்று **மாலை 3.30 மணிக்கு** வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் **20.08.2025ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை https://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் **E Token / Digital Signature Card** உபயோகித்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இதர விவரங்களை பேரூாட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்துக்கொள்ளலாம்.

**செயல் அலுவலர்,**
**ஆரணி பேரூராட்சி, திருவள்ளூர் மாவட்டம்**

செ.ம.தொ.இ/4171/ஒப்பந்தப்புள்ளி/2025

**தமிழ்நாடு அரசு**
**பொதுப்பணித்துறை**
**கண்காணிப்புப்பொறியாளர் அலுவலகம், பொபது,**
**மரபு கட்டடங்கள் வட்டம், சென்னை - 600005.**

**முதல் அழைப்பு : ஒப்பந்தபுள்ளி அறிவிக்கை எண்: 11/ மகவ / 2025–26, நாள்: 04.08.2025.**
**மின்ணனு ஒப்பந்தபுள்ளி அறிவிக்கை – மொத்த வகை/ ஒரு உரை முறை**

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொபது, மரபு கட்டடங்கள் வட்டம், சேப்பாக்கம், சென்னை-5, அவர்களால் கீழ்கானும் பணிகளுக்கு பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து மின்ணனு ஒப்பந்தபுள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (வரிகள் உட்பட) | முன்வைப்பு தொகை மற்றும் பணிகள் முடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தகாரர்கள் | முன்வைப்பு தொகை வரவு வைத்து கட்டவேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி மாவட்டம், பொருனை அருங்காட்சியகத்தில் இரும்பு யுகத்தை பற்றவைத்தல் - உருவகப்படுத்தப்பட்ட இரும்பு உருக்கும் செயல்முறை (டிஜிட்டல்) அனுபவத்தை வழங்குதல். | ரூ.59.00 இலட்சம் | ரூ.59,000/- 02 மாதங்கள் | வகுப்பு–IV மற்றும் அதற்கு மேல் (திருத்திய பண வரம்பின் படி) | முன் வைப்பு தொகை மின்ணனு பணப்பரிமாற்ற முறையில் இணைய தளத்தில் செய்திடல் வேண்டும் |
| 2. | திருநெல்வேலி மாவட்டம், பொருனை அருங்காட்சியகத்தில் கரை யிலிருந்து ஆழம் வரை கொற்கையின் மூழ்கும் பயணத்தை (படகு மற்றும் சிமுலேட்டர் இயக்கங்களுடன் வி.ஆர் அனுபவம் உருவாக்குதல். | ரூ.240.00 இலட்சம் | ரூ.2,40,000/- 04 மாதங்கள் | | |
| 3. | திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பொருனை அருங்காட்சியகத்தில் ஐந்திணை 5ஞி - தமிழ் நிலப்பரப்புகள் வழியாக ஒரு பயணம் (பன்முக உணர்வு 5D அனுபவம்) உருவாக்கம். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பொருனை அருங்காட்சியகத்தில் சுமார் 40 இருக்கைகள் கொண்ட நியூமேடிக் சிமுலேட்டருக்கு 5D நாடக அனுபவத்தை வழங்குதல். | ரூ.183.70 இலட்சம் | ரூ.1,83,000/- 04 மாதங்கள் | | |
| 4. | திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பொருனை அருங்காட்சியகத்தில் சுமார் 40 இருக்கைகள் கொண்ட நியூமேடிக் சிமுலேட்டருக்கு 5ஞி நாடக அனுபவத்தை வழங்குதல். | ரூ.183.70 இலட்சம் | Rs.82,000/- 02 மாதங்கள் | | |
| 5. | கடலூர் மாவட்டம் தேவனாம்பட்டினத்தில் உள்ள துறைமுக அலுவலர் கட்டிடத்தின் பாதுகாப்பு, புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு. | ரூ.364.80 இலட்சம் | Rs. 3,64,000/- 12 மாதங்கள் | வகுப்பு–III மற்றும் அதற்கு மேல் (திருத்திய பண வரம்பின்படி) | |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பதிவிறக்கம் செய்வதற்கான தொடக்க நாள் மற்றும் நேரம் : **07.08.2025 பிற்பகல் 03.00 மணி முதல்**
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணைய வழியில் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம். : **21.08.2025 பிற்பகல் 03.00 மணி வரை**
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையத்தில் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம். : **21.08.2025 பிற்பகல் 03.30 மணி அளவில்**
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் **http://tntenders.gov.in** என்ற இணைய தளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் இணைய தளம் வாயிலாகவே ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
5. முன்வைப்பு தொகை இல்லாமல் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் உடனடியாக நிராகரிக்கப்படும்.
6. கூடுதல் தகவல்களுக்கு **http://tntenders.gov.in** என்ற இணைய தளத்தினை பார்வையிடவும்.

**கண்காணிப்புப்பொறியாளர், பொபது,**
**மரபு கட்டடங்கள் வட்டம், சென்னை–5.**

செ.ம.தொ.இ/4092/ஒப்பந்தப்புள்ளி/2025

### அவர் இருந்திருந்தால் மேலும் சிறப்பு:

# கடைசி போட்டியில் பும்ராவை மிஸ் செய்தேன்: முகமது சிராஜ்

**லண்டன், ஆக.06-**

அவர் விளையாடியிருந்தால் இந்த வெற்றி இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட்டில் ஜஸ்பிரித் பும்ராவை மிஸ் செய்தேன் என முகமது சிராஜ் தெரிவித்துள்ளார்.



**இந்தியா த்ரில் வெற்றி...**

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்று முன்தினம் நிறைவடைந்தது. ஓவலில் நடைபெற்ற கடைசி டெஸ்ட்டில் இங்கிலாந்து அணியை 6 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி த்ரில் வெற்றி பெற்றது. டெஸ்ட் தொடரையும் 2-2 என்ற கணக்கில் சமன் செய்தது.

**ஆட்டநாயகன்...**

இந்தியா தரப்பில் அபார பந்துவீச்சை வெளிப்படுத்திய முகமது சிராஜ் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினார். அபார பந்துவீச்சை வெளிப்படுத்தி வெற்றிக்கு முக்கியக் காரணமாக அமைந்த அவருக்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது. இந்திய அணியின் பிரதான வேகப் பந்துவீச்சாளரான ஜஸ்பிரித் பும்ரா கடைசி டெஸ்ட்டில் விளையாடியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என முகமது சிராஜ் தெரிவித்துள்ளார்.

**மிஸ் செய்தேன்...**

இது தொடர்பாக பி.சி.சி.ஐ. வெளியிட்டுள்ள விடியோவில் அவர் பேசியிருப்பதாவது: இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் பேட்டர்கள் மற்றும் பந்துவீச்சாளர்கள் மிகவும் அற்புதமாக விளையாடினார்கள். கடைசி போட்டியில் இந்திய அணி வெற்றிப் பாதைக்கு திரும்பியது நம்பமுடியாத விதமாக இருந்தது. நான் ஜஸ்பிரித் பும்ராவை மிஸ் செய்தேன்.

**பணிச்சுமை காரணமாக...**

ஏனெனில், கடைசி போட்டியில் அவர் விளையாடியிருந்தால் இந்த வெற்றி இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். ஜஸ்பிரித் பும்ரா மீதும் என் மீதும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்றார். பணிச்சுமை காரணமாக இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட்டில் ஜஸ்பிரித் பும்ரா விளையாடாதது குறிப்பிடத்தக்கது.

# ஒருநாள் தொடரில் சுப்மன் கில்லை கேப்டனாக்க இதுவே சரியான நேரம்

## சுனில் கவாஸ்கர் யோசனை

**லண்டன், ஆக.06-**

ஆஸ்திரேலியா அல்லது வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான ஒருநாள் தொடரில் சுப்மன்கில்லை கேப்டனாக தேர்வு செய்ய இதுவே சரியான நேரம் என கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.



**சாதித்து காட்டியது...**

சுப்மன்கில் தலைமையிலான இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிக் கொண்ட டெஸ்ட் தொடரை 2-2 என்ற கணக்கில் சமன் செய்தது. விராட் கோலி, ரோகித் சர்மா ஆகியோரின் ஓய்வுக்கு பிறகு இளம் வீரர்களை கொண்ட அணி இங்கிலாந்தில் சாதித்து காட்டியது. தொடரை இழக்காமல் சமன் செய்தது பாராட்டுதலுக்குரியதாகும்.

**முதல் தொடரிலேயே...**

சுப்மன்கில் கேப்டனாக பொறுப்பேற்று முதல் தொடரிலேயே சாதித்து காட்டினார். மேலும் பேட்டிங்கிலும் அவர் அபாரமாக செயல்பட்டார். 5 டெஸ்டில் 754 ரன்கள் (10 இன்னிங்ஸ்) குவித்தார். சராசரி 75.40 ஆகும். இதில் 4 சதம் அடங்கும். அதிகபட்சமாக 269 ரன் குவித்துள்ளார்.

**ஒருநாள் போட்டிக்கும்...**

இந்த நிலையில் ஒருநாள் போட்டிக்கும் சுப்மன் கில்லை கேப்டனாக்கலாம் என்று முன்னாள் கேப்டனும், டெலிவிஷன் வர்ணனையாளருமான கவாஸ்கர் யோசனை தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக கூறியதாவது:- ஒரு நாள் போட்டிக்கும் கேப்டனாக சுப்மன் கில்லை தேர்வு செய்ய தேர்வுக்குழு பரிசீலனை செய்யலாம். ரோகித் சர்மா, விராட் கோலி ஒரு நாள் போட்டியில் விளையாட தயாராக உள்ளனர். அவர்கள் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை. இந்த விஷயங்கள் தேர்வுக் குழுவை பொறுத்தது.

**சரியான நேரம்...**

ஆஸ்திரேலியா அல்லது வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான ஒருநாள் தொடரில் தேர்வுக்குழு விரும்பினால் சுப்மன்கில்லை கேப்டனாக தேர்வு செய்யலாம். இதுவே சரியான நேரமாகும். சுப்மன் கில் அணியில் மிகவும் விரும்பப்படும் வீரர்களில் ஒருவராவார். 2-வது டெஸ்டில் அவர் குவித்த 269 ரன் மிகவும் சிறப்பானது. ஒவ்வொரு ரன்னும் முக்கியமானது என்பதை அவர் அந்த டெஸ்டில் உறுதிப்படுத்த விரும்பினார். இவ்வாறு கவாஸ்கர் கூறியுள்ளார்.

### இங்கிலாந்தில் அதிக முறை 4 விக்கெட்:

# சிராஜ் வரலாற்று சாதனை

**ஓவல், ஆக.06-**

இங்கிலாந்தில் அதிக முறை 4 விக்கெட்டுக்கு மேல் எடுத்த முதல் ஆசிய பந்து வீச்சாளர் என்ற வரலாற்று சாதனையை சிராஜ் படைத்தார்.

**தொடர் சமன்...**

இங்கிலாந்துக்கு எதிராக லண்டன் ஓவல் மைதானத்தில் நடந்த பரபரப்பான 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 6 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றி மூலம் 5 போட்டிக் கொண்ட டெஸ்ட் தொடர் 2-2 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.

**ஆட்ட நாயகன்...**

ஓவல் டெஸ்டில் இந்தியாவின் வெற்றிக்கு முகமது சிராஜ் முக்கிய பங்கு வகித்தார். அவர் 5 விக்கெட் வீழ்த்தினார். முதல் இன்னிங்சில் 4 விக்கெட் கைப்பற்றினார். இந்த டெஸ்டில் மொத்தம் 9 விக்கெட் வீழ்த்தினார். இதனால் ஆட்ட நாயகன் விருது அவருக்கு கிடைத்தது.

**அதிக விக்கெட்...**

இந்த தொடரில் சிராஜ் மொத்தம் 23 விக்கெட் வீழ்த்தினார். இதன் மூலம் அவர் பும்ராவின் சாதனையை சமன் செய்தார். பும்ரா 2021-22 இங்கிலாந்தில் தொடரில் 23 விக்கெட் கைப்பற்றி இருந்தார். இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் அதிக விக்கெட் கைப்பற்றிய வீரராக இருவரும் இருக்கிறார்கள்.

**ஆசிய பந்து வீச்சாளர்...**

இங்கிலாந்தில் அதிக முறை 4 விக்கெட்டுக்கு மேல் எடுத்த முதல் ஆசிய பந்து வீச்சாளர் என்ற வரலாற்று சாதனையை சிராஜ் படைத்தார். அவர் 7-வது முறையாக 4 விக்கெட்டுக்கு மேல் (11 போட்டி) எடுத்துள்ளார். இலங்கையை சேர்ந்த முரளீதரன் (6 டெஸ்ட்), பாகிஸ்தானின் வாக்கர் யூனுஸ் (10 போட்டி) ஆகியோர் தலா 6 முறை 4 விக்கெட்டுக்கு மேல் எடுத்து இருந்தனர். இவர்களை சிராஜ் முந்தினார்.

**3-வது முறையாக...**

மற்ற இந்திய வீரர்களில் பும்ரா 5 தடவையும், இஷாந்த் சர்மா 4 முறையும் 4 விக்கெட்டுக்கு மேல் எடுத்துள்ளனர். சிராஜ் 3-வது முறையாக ஆட்ட நாயகன் விருதை பெற்றுள்ளார். 2023 ஆண்டு வெஸ்ட்இண்டீசுக்கு எதிரான போர்ட் ஆப் ஸ்பெயின் டெஸ்டிலும், 2024-ம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான கேப்டவுன் டெஸ்டிலும் ஆட்ட நாயகன் விருது அவருக்கு கிடைத்தது.

# வெற்றி குறித்து கம்பீர் நெகிழ்ச்சி

**லண்டன், ஆக.06-**

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 'ஆண்டர்சன் - டெண்டுல்கர்' டிராபிக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் முடிவடைந்த முதல் 4 போட்டிகளின் முடிவில் தொடரில் இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் (4-வது போட்டி டிரா) முன்னிலையில் இருந்தது.

**396 ரன்கள் குவிப்பு...**

இதனையடுத்து இந்த தொடரின் முடிவை நிர்ணயிக்கும் 5-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவலில் நடைபெற்றது. இதில் முதல் இன்னிங்சில் முறையே இந்தியா 224 ரன்களும், இங்கிலாந்து 247 ரன்களும் எடுத்தன. 23 ரன் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்சை ஆடிய இந்தியா 396 ரன்கள் குவித்து ஆல்-அவுட் ஆனது.

**இந்தியா வெற்றி...**

இதன் மூலம் இங்கிலாந்துக்கு 374 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. மெகா இலக்கை நோக்கி 2-வது இன்னிங்சை விளையாடிய இங்கிலாந்து அணி 85.1 ஓவர்களில் 367 ரன்களுக்குள் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் இந்தியா 6 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன் தொடரையும் 2-2 என்ற கணக்கில் சமன் செய்தது.

**சபாஷ் பாய்ஸ்...**

இந்நிலையில் இந்தியா அணி தொடரை சமன் செய்தது குறித்து இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீர் நெகிழ்ச்சியாக பதிவிட்டுள்ளார். அதில் நாம் சிலவற்றை வெல்வோம், சிலவற்றை இழப்போம்.... ஆனால் நாம் ஒருபோதும் சரணடைய மாட்டோம்! சபாஷ் பாய்ஸ் என பதிவிட்டுள்ளார்.

# ஒரே மாதத்தில் 3.53 கோடி பேர் பதிவு: மோடியின் திட்டம் கின்னஸ் சாதனை

**புதுடெல்லி, ஆக.06-**

மோடியின் பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியின் 8-வது பதிப்பிற்கு ஒரே மாதத்தில் 3.53 கோடி பேர் பதிவு செய்து கின்னஸ் சாதனை படைக்கப் பட்டுள்ளது.

மாணவர்கள், ஆசிரியர்களை நேரில் சந்தித்து பிரதமர் மோடி பேசும் பரிக்ஷா பே சர்ச்சா (தேர்வு பற்றிய கலந்துரையாடல்) திட்டம் கடந்த 2018ம் ஆண்டு முதல் நடந்து வருகிறது. பிரதமர் மோடியின் திட்டமான பரிக்ஷா பே சர்ச்சா கல்வி அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதில் பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களையும் தேர்வை எழுத உதவும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களுக்கு பிரதமர் மோடி ஆலோசனைகளை அளித்து வருகிறார்.

இந்த நிலையில் இந்த நிகழ்ச்சியின் 8-வது பதிப்பிற்கு ஒரு மாதத்தில் 3.53 கோடி பேர் பதிவு செய்துள்ளனர். இந்த நிகழ்ச்சிக்கு ஒரு மாதத்தில் பொதுமக்கள் ஈடுபட்டு தளத்தில் அதிகம் பேர் பதிவு செய்ததற்காக கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது. டெல்லியில் நேற்று முன்தினம் நடந்த விழாவில் கின்னஸ் உலக சாதனைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வின்போது மத்திய அமைச்சர்கள் தர்மேந்திர பிரதான், அஸ்வினி வைஷ்ணவ், ஜிதின் பிரசாதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பா.ஜ.வின் கட்டுப்பாட்டில் தேர்தல் கமிஷன்: திருமாவளவன் குற்றச்சாட்டு

**திருச்சி, ஆக.06-**

'பா.ஜ.வின் கட்டுப்பாட்டில் தேர்தல் கமிஷன் உள்ளது; அவர்களால் முழு சுதந்திரத்துடன் செயல்பட முடியவில்லை' என திருமாவளவன் தெரிவித்தார்.

இது தொடர்பாக திருச்சியில் நிருபர்கள் சந்திப்பில் திருமாவளவன் கூறியதாவது: பீஹாரில் தேர்தல் கமிஷன் வாக்காளர் பட்டியலில் சிறப்பு திருத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகிறது. அதில் ஏராளமான தில்லு முல்லுகள் நடைபெறுவதாக தெரிகிறது.

குறிப்பாக பா.ஜ.வுக்கு எதிராக வாக்களிக்கக் கூடியவர்கள் எல்லாரையும் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவதும், வெளி மாநிலங்களில் இருந்து பலரை பீஹாரில் வாக்காளர் பட்டியலில் சேர்த்தும், அவர்களை ஓட்டளிக்க செய்வது, கடந்த லோக்சபா தேர்தலிலும் செய்திருக்கிறார்கள். அதற்கு தேர்தல் கமிஷன் துணை போகிறது என்கிற குற்றச்சாட்டுகளை காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து எதிர்கட்சிகளும் வலியுறுத்தி வருகிறோம்.

தமிழகத்திலும் அப்படி செய்வதற்கு சில முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற தகவல்கள் வெளியாகுகின்றன. அவர்கள் இந்தியா முழுவதும் இதனை நடைமுறைப்படுத்த வாய்ப்பு இருக்கிறது. தேர்தல் கமிஷன் இப்படி ஒரு சார்பாக செயல்படுவது, ஜனநாயக விரோதம். இதனால் தேர்தல் கமிஷன் மீதான நம்பகத்தன்மை சிதைகிறது சிதறுகின்றன. இவ்வாறு திருமாவளவன் கூறினார்.

# அரசு பஸ்சில் மகளிர் பயணம் செய்ய கட்டணம் வசூலிப்பா?

## தமிழ்நாடு அரசு விளக்கம்

**சென்னை, ஆக. 06-**

பெண் பயணி வீடியோ பதிவுக்கு தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

தமிழக அரசு 'விடியல் பயண' திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன்படி, சாதாரண கட்டண மாநகர பஸ்களில் பெண்கள் கட்டணமின்றி பயணம் செய்து வருகின்றனர். இந்த நிலையில், ''மகளிர் பயணம் செய்ய கட்டணம் இல்லை என்று போர்டு போட்ட பஸ்சில் காசு வாங்கிக் கொண்டு பெண்களுக்கு, ஆண்களுக்கான டிக்கெட் தருகிறார்கள். என்ன இது?'' என்று பெண் ஒருவர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் ஒரு டிக்கெட்டுடன் பதிவிட்டிருந்தார். அதில், திருச்சியில் இருந்து முசிறி செல்ல ஆண் ஒருவருக்கு ரூ.42 வீதம் 2 பேருக்கு ரூ.84 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை பலரும் பகிர்ந்தனர். சிலர் தமிழக அரசை விமர்சனமும் செய்தனர். இதனைத்தொடர்ந்து தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில், ''மேற்கண்ட புகைப்படத்தில் இருப்பது விடியல் பயணத் திட்டத்தின் கீழ் வரும் பஸ் அல்ல. இது திருச்சியில் இருந்து முசிறிக்கு செல்லும் பி.எஸ்.-4 புறநகர் பஸ் (நீல நிறம்). இதற்கு பயண கட்டணம் உண்டு. பஸ்சின் கண்டக்டர் மின்னணு பயணச்சீட்டில் பயணி விவரம் மகளிர் என வருவதற்கு பதிலாக, தவறுதலாக ஆண் என குறிப்பிட்டு பயணச்சீட்டு வழங்கியுள்ளார் என்று துணை மேலாளர் வணிகம் கூட்டாண்மை (சேலம் புறநகர் பேருந்து) தெரிவித்துள்ளார். தவறான தகவலை பரப்பாதீர்கள்'' என்று கூறப்பட்டுள்ளது.

## இந்திய ஹாக்கி அணி அறிவிப்பு

12-வது ஆசிய கோப்பை ஹாக்கி போட்டி பீகாரில் உள்ள ராஜ்கிர் நகரில் வருகிற 29-ந் தேதி தொடங்குகிறது. இந்த போட்டிக்கு தயாராகும் பொருட்டு இந்திய ஹாக்கி அணி, ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து அந்த நாட்டு அணியுடன் 4 ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இதில் இந்தியா-ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான முதலாவது ஆட்டம் பெர்த்தில் வருகிற 15-ந் தேதி நடக்கிறது. ஆஸ்திரேலிய தொடருக்கான 24 பேர் கொண்ட இந்திய ஹாக்கி அணி நேற்று அறிவிக்கப்பட்டது. ஹர்மன்பிரீத் சிங் கேப்டனாக நீடிக்கிறார்.

இந்திய அணி வருமாறு:- கோல்கீப்பர்கள்: கிருஷ்ணன் பதாக், சுரஜ் கார்கெர், பின்களம்: சுமித், ஜர்மன்பிரீத் சிங், ஹர்மன்பிரீத் சிங் (கேப்டன்), சஞ்சய், அமித் ரோஹிதாஸ், நீலம் சஞ்சீப் செஸ், ஜூக்ராஜ் சிங், பூவன்னா, நடுகளம்: ராஜிந்தர் சிங், ராஜ்குமார் பால், ஹர்திக் சிங், மன்பிரீத் சிங், விவேக் சாகர் பிரசாத், ரபிசந்திர சிங் மொய்ராங்தெம், விஷ்ணுகாந்த் சிங், முன்களம்: மன்தீப் சிங், ஷிலானந்த் லக்ரா, அபிஷேக், சுக்ஜீத் சிங், தில்பிரீத் சிங், ஆதித்யா லாலேஜ், செல்வம் கார்த்தி (தமிழ்நாடு). பெங்களூரு சாய் மையத்தில் பயிற்சியில் ஈடுபட்டு வரும் இந்திய அணி, வருகிற 8-ந் தேதி ஆஸ்திரேலியா புறப்பட்டு செல்கிறது.

## தெலங்கானா காவல்துறை பாராட்டு

ஹைதராபாதைச் சேர்ந்த முகமது சிராஜ் (31 வயது) இந்திய டெஸ்ட் அணிக்காக 2020 முதல் விளையாடி வருகிறார். இதுவரை 41 டெஸ்ட்டில் 123 விக்கெட்டுகள் எடுத்துள்ளார். இதில் 100க்கும் அதிகமான விக்கெடுக்களை வெளிநாட்டில் எடுத்து அசத்தியுள்ளார். ஆண்டர்சன் - டெண்டுல்கர் டிராபியின் கடைசி டெஸ்ட்டில் முதல் இன்னிங்ஸில் 4, இரண்டாம் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்ட நாயகன் விருது வென்றார்.

சிராஜுக்கு பலரும் வாழ்த்துகளை தெரிவித்து வருகிறார்கள். இந்நிலையில், தெலங்கானா காவல்துறை தனது எக்ஸ் பக்கத்தில், " டிஎஸ்பி முகமது சிராஜுக்கு வாழ்த்துகள்! இங்கிலாந்துக்கு எதிராக வரலாற்றி வெற்றிபெற உதவிய அவரது சிறப்பான செயல்பாட்டுக்கு வாழ்த்துகள். தெலங்கானாவின் பெருமை. காவல்துறை, விளையாட்டு உடையில் அவர் ஹீரோ!'' எனக் குறிப்பிட்டுள்ளது.

### பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆக.12-ல் கோவை பயணம்

**சென்னை, ஆக. 06-**

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் 12-ம் தேதி கோவை செல்கிறார். கோவை, திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்க உள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த மாதம் 22, 23-ம் தேதிகளில் திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதாக இருந்தது. இந்தநிலையில் அவருக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் இந்த நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டன. உடல்நலம் சரியானதை தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் மாவட்டந்தோறும் சென்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

இந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக வருகிற 12-ம் தேதி கோவை செல்கிறார். இதற்காக 11-ம் தேதி சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவைக்கு செல்கிறார். கோவை விமானநிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கோவை, திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்டோர் திரண்டு வந்து உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர்.

இதன்பின்னர் முதல்வர் கார் மூலம் திருப்பூர் மாவட்டம் செல்கிறார். அங்கு பல்லடம் மற்றும் உடுமலை பேட்டையில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். இதில் அமைச்சர்கள், கலெக்டர் உள்ளிட்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

இதன்பின்னர் 12-ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் பொள்ளாச்சிக்கு வருகிறார். பின்னர் பொள்ளாச்சி-உடுமலை சாலையில் உள்ள நீர் வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் அலுவலக வளாகத்தில் பரம்பிக்குளம், ஆழியாறு பாசன திட்டம் நிறைவேற காரணமாக இருந்த பெருந்தலைவர் காமராஜர், சி.சுப்பிரமணியம், பொள்ளாச்சி மகாலிங்கம் ஆகிய தலைவர்களின் உருவ சிலைகளை முதல்வர் திறந்து வைக்கிறார். இதில் மாவட்ட கலெக்டர் மற்றும் அமைச்சர்கள், அரசு துறை அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

இதன்பின்னர் கார் மூலம் புறப்பட்டு கோவை அவினாசி ரோட்டில் உள்ள தனியார் ஓட்டலில் நடைபெறும் கோவைக்கான மாஸ்டர் பிளான் திட்டம் 2041 குறித்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்கிறார். இதில் மாஸ்டர் பிளான் குறித்து பொதுமக்கள் மற்றும் தொழில்முனைவோர்களின் ஆலோசனைகளை அவர் கேட்டறிகிறார். முதல்வர் கோவை வருகையை முன்னிட்டு நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்து வருகிறார்கள்.

# அ.தி.மு.க. மக்களை நம்பி இருக்கிறது: தென்காசியில் இ.பி.எஸ். பிரச்சாரம்



**தென்காசி, ஆக. 06-**

தி.மு.க. கூட்டணியை நம்பி உள்ளது. அ.தி.மு.க. மக்களை நம்பி உள்ளது'' என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரச்சாரம் செய்து வருகிறார். நேற்று மாலை குற்றாலத்தில் இருந்து புறப்பட்ட அவர், தென்காசியில் பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசியது: "இந்த பகுதி வேளாண்மை தொழில் நிறைந்த பகுதி. அ.தி.மு.க. ஆட்சியில் வேளாண் தொழிலுக்கு முன்னுரிமை கொடுத்து பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இரண்டு முறை பயிர்கடன் தள்ளுபடி செய்தோம். மும்முனை மின்சாரம் 24 மணி நேரமும் வழங்கினோம். குடி மராமத்து திட்டத்தில் குளங்களை தூர் வாரினோம். பேரிடர் காரணமாக பாதிப்புக்கள்ளான விவசாயிகளுக்கு காப்பீட்டு திட்டத்தில் இழப்பீட்டு தொகை பெற்று தந்தோம்.

விவசாயிகள் பாதிக்கப்படும்போதெல்லாம் நிவாரணம் வழங்கியது அ.தி.மு.க. அரசு. விவசாய தொழிலாளர்களுக்கு பசுமை வீடுகள், ஆடு, மாடுகள், கோழிகள் கொடுத்து, பொருளாதாரத்தை உயர்த்தினோம். சட்டத்தின் ஆட்சியை நடத்தியது அ.தி.மு.க.. அ.தி.மு.க.வின் 10 ஆண்டு கால ஆட்சி பொற்கால ஆட்சி என்று மக்கள் பாராட்டுகின்றனர். அதிகமான கல்லூரிகளை திறந்து கல்வியில் சாதனைகள் படைத்தோம். மருத்துவ கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் என பல்வேறு கல்லூரிகளை கொண்டுவந்தது அ.தி.மு.க. அரசு. 2019-20ல் 54 சதவீதம் பட்டப்படிப்பு படிக்கும் சூழ்நிலையை கொண்டுவந்தோம். அரசு எப்படி செயல்பட வேண்டும் என்பதற்கு உதாரணம் அ.தி.மு.க. ஆட்சி. திமுக ஆட்சிக்கு வந்ததும் விலையில்லா மடிக்கணி திட்டத்தை நிறுத்தினர். 10 ஆண்டில் 52 லட்சத்து 35 ஆயிரம் பேருக்கு லேப்டாப் கொடுத்தோம். மீண்டும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் லேப்டாப் வழங்கும் திட்டம் தொடரும்.

திமுக பலம் வாய்ந்த கூட்டணியை அமைத்துள்ளதாக கூறும் ஸ்டாலின், அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்று நம்புகிறார். திமுக கூட்டணியை நம்பி உள்ளது. அ.தி.மு.க. மக்களை நம்பி உள்ளது.

இரட்டைகுளம் முதல் ஊத்துமலை வரை கால்வாய் திட்டத்தை கொண்டுவந்தோம். திமுக அரசு ரத்து செய்த இந்த கால்வாய் திட்டம் மீண்டும் அமைக்கப்படும். தென்காசியில் போக்குவரத்து நெரிசலை குறைக்க சுற்றுச்சாலை பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். குற்றாலம் சுற்றுலா தலத்தை மேம்படுத்த வசதிகள் செய்யப்படும்'' என்றார். தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் செல்வமோகனதாஸ் பாண்டியன், தளவாய்சுந்தரம், ஆர்.பி.உதயகுமார், காமராஜ், கடம்பூர் ராஜூ, விஜயபாஸ்கர், இசக்கி சுப்பையா எம்எல்ஏ உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### தாம்பரம் புதிய அரசு மருத்துவமனை:

# தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகஸ்ட் 9-ல் திறந்து வைக்கிறார்

**தாம்பரம், ஆக. 06-**

தாம்பரம் புதிய அரசு மருத்துவமனை கட்டிடத்தை முதல்வர் ஸ்டாலின் வரும் ஆக. 9-ம் தேதி திறந்துவைக்கவுள்ளதாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் இல்லாத 24 மாவட்டங்களில் மக்கள் பயன்பெறும் வகையில் உயர்தர மருத்துவ சேவைகளை வழங்கிட புதிய மாவட்ட தலைமை மருத்துவமனைகளை அமைத்தல் மற்றும் மருத்துவமனைகளை மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் ஜெயங்கொண்டான், தாம்பரம், பழனி உள்ளிட்ட 19 அரசு மருத்துவமனைகள், அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்தார்.

தாம்பரம் அரசு மருத்துவமனையை செங்கல்பட்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி, தாம்பரம் சானிடோரியம் பேருந்து நிலையம் அருகே ரூ.115.38 கோடி மதிப்பீட்டில் புதிய மருத்துவமனை அமைக்க திட்டமிடப்பட்டது. இந்த மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில், தற்போது ரூ.5.38 கோடியில் மருத்துவ உபகரணங்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. 2,27,320 சதுர அடி பரப்பளவில் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவமனையில் 400 படுக்கைகள், 6 அறுவை சிகிச்சை அரங்குகள்,40 ஐசியூ படுக்கைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் உள்ளன.

இதற்கிடையே, குரோம்பேட்டையில் இருந்த பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில், ரூ.7.10 கோடியில் பல் மருத்துவமனையும், ரூ.1 கோடியில் ஒருங்கிணைந்த ஆய்வகமும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த 3 மருத்துவக் கட்டிடங்களையும் ஆக.9-ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் மக்கள் பயன்பாட்டுக்காக திறந்து வைக்கவுள்ளார். தாம்பரம் ஜிஎஸ்டி சாலையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மாவட்ட தலைமை மருத்துவமனையை பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு ஆய்வு செய்தார். ஆய்வுக்கு பின் செய்தியாளர்களுடன் பேசிய அமைச்சர் வேலு, "முதல்வர் ஸ்டாலின் வரும் ஆக. 9 ஆம் தேதி தாம்பரம் புதிய அரசு மருத்துவமனை கட்டிடத்தை திறந்து வைக்கவுள்ளார்" என்று தெரிவித்தார்.




மதுரை ஆட்சியரகத்தில் வணிகவரித்துறை சார்பில் ஜி.எஸ்.டி, மற்றும் டி.டி.எஸ் பிடித்தம் தொடர்பான ஆய்வுக் கூட்டம் அமைச்சர் மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. உடன் கலெக்டர் பிரவீன் குமார், ஆணையாளர் சித்ரா, இணை ஆணையாளர் கீதாபரதி மற்றும் திட்ட அலுவலர் வானதி ஆகியோர் உள்ளனர்.

## 20.44 கோடி ரூபாய் மதிப்பிலான
# கௌசிகா நதியை புனரமைக்கும் பணியை அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்தார்



**விருதுநகர், ஆக. 06-**

விருதுநகர் நகராட்சி ஆத்துப்பாலம் அருகில் நீர்வளத் துறை வைப்பாறு வடிநிலை கோட்டம், விருதுநகர் மூலம் கௌசிகா நதியை ரூ.20.44 கோடி மதிப்பில் புனரமைத்து, நவீனமயமாக்கல் பணி மற்றும் வரத்து கால்வாய்களை தூர்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன் , அமைச்சர் தங்கம்தென்னரசு கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் பேசியதாவது:-

முதலமைச்சரிடம் விருதுநகர் மாவட்டத்திற்கான பல்வேறு கோரிக்கைகளை அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் முன் வைத்தோம்.

அதில் முக்கியமான கோரிக்கையாக கௌசிகா நதியை சீரமைத்து புனரமைக்க வேண்டும் என்பது தான். இந்த திட்டம் மிகவும் நல்ல திட்டம். இந்த திட்டத்திற்கு உடனடியாக ஏறத்தாழ ரூ.20.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அந்த மகத்தான பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. நாம் நதிகள், நீர்நிலைகளை சீரமைத்தால் தான் விவசாயம், நிலத்தடி நீர்வளம் அனைத்தும் பெருகும்.

கௌசிகா நதியில் 11.50 கிலோ மீட்டர் வரையிலான நீளம் வரை தூர்வாரி சீரமைக்கப்பட உள்ளது.

அதுமட்டுமல்லாமல் இத்திட்டத்தின் கீழ், நதியின் தடுப்பணை மற்றும் குறுக்கு கட்டுமான பணிகளை புனரமைத்து தடுப்புச்சுவர்அமைக்கும் பணிகளும், நகரத்தில் இருந்து வரக்கூடிய கழிவுநீர் எங்கெல்லாம் கலக்கிறதோ அந்த இடங்களை கண்டறிந்து, சுமார் 1.60 கி.மீ. நீளத்திற்கு குழாய்கள் அமைத்து, நதியில் கலக்காமல்; அதனை மீண்டும் மறுசுழற்சி செய்து, சுத்திகரிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதன் மூலம், சுமார் 2891 ஏக்கர் நிலப்பரப்பு பயன்பெறுகிறது.

மேலும், நீர்மேலாண்மை, நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் விவசாய உற்பத்தி திறனை அதிகரிக்க இத்திட்டம் வழிவகை செய்யும். நம்முடைய உயிர் துளி என்கின்ற அடிப்படையில் நீர்வள ஆதாரத்தை பெருக்குவதற்கு நம்முடைய முதலமைச்சர் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், செயற்பொறியாளர் மலர்விழி, விருதுநகர் நகராட்சி ஆணையாளர் சுகந்தி, விருதுநகர் நகராட்சி பொறியாளர் எட்வின் பிரைட் ஜோஸ், விருதுநகர் நகர்மன்ற தலைவர் மாதவன், உதவி செயற்பொறியாளர் சகாதேவன், பொறியாளர்கள், உள்ளாட்சி பிரதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கட்டுமான பணியில் தொய்வு:
# அதிகாரிகளை கடிந்து கொண்ட அமைச்சர்



**விருதுநகர், ஆக.06-**

விருதுநகர் அரசு அருங்காட்சியகம் கட்டுமானம் தொடர்பாக பொதுப்பணித் துறை அதிகாரிகளை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கடிந்து கொண்டார்.

விருதுநகரில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் அரசு அருங்காட்சியகத்திற்காக விருதுநகர் மாவட்ட விளையாட்டு அரங்கம் அருகே 2 ஏக்கர் பரப்பளவில் ரூ.6.80 கோடியில் தரைத்தளம் மற்றும் 2 மாடி கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. கடந்த 2024 பிப்ரவரி 26ம் தேதி கட்டுமான பணிகள் தொடங்கப் பட்டன. பொதுப்பணித் துறை ஒப்பந்ததாரர்கள் மூலம் இக்கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மாதம் 25ம் தேதி உடன் கட்டுமான ஒப்பந்த நிறைவடைகிறது. தற்போது 50 சதவீதம் மட்டுமே கட்டுமான பணிகள் முடிக்கப் பட்டுள்ளன.

இந்நிலையில் கட்டுமான பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா முன்னிலையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு நேற்றுறு காலை ஆய்வு மேற்கொண்டார். அப்போது கட்டுமான பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து கேள்வி எழுப்பினார்.

அப்போது அமைச்சர் பேசுகையில், ''நீங்கள் அருங்காட்சியகம் கட்டி முடிக்கும் வரை திறப்பு விழாவிற்காக முதல்வர் காத்திருப்பாரா ? என கேள்வி எழுப்பினார். கட்டுமான பணிகள் மிகவும் மெதுவாக நடைபெற்று வருகிறது. இது ஏற்றுக் கொள்ள முடியாதது. குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகளை முடிக்க வேண்டும் என்று அமைச்சர் அதிகாரிகளிடம் கடிந்து கொண்டார். மேலும் ஒப்பந்ததாரரை அழைத்து விரைவில் கட்டுமான பணிகள் அனைத்தையும் முடிக்க வேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தினார்.



ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் செல்லியம்மன் கோவில் 49-ம் ஆண்டு பூச்சொரிதல் விழாவை முன்னிட்டு பொது அன்னதானம் நடைபெற்றது. இதில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## நத்தம் அருகே
# உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்

**நத்தம், ஆக. 06-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே புன்னப்பட்டி ஊராட்சி உலுப்பகுடியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடந்தது. இதற்கு திமுக மத்திய ஒன்றிய செயலாளர் சேக்சிக்கந்தர்பாட்சா தலைமை தாங்கினார். முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டிஅம்பலம், திமுக மாவட்ட பொருளாளர் விஜயன்,திமுக ஒன்றிய செயலாளர்கள் ரத்தினக்குமார், பழனிச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த முகாமில் மகளிர் உரிமை தொகை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூகநலத்துறை, வீட்டுவசதி உள்ளிட்ட 13 அரசு துறைகளின் சார்பில் பொதுமக்களிடம் இருந்து மனுக்கள் பெறப்பட்டது.முகாமில் திமுக மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்துகுமார்சாமி, தாசில்தார் ஆறுமுகம், யூனியன் ஆணையாளர் கிருஷ்ணன் உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# விருதுநகர்: வருவாய் கோட்ட அளவில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

**விருதுநகர், ஆக. 06-**

விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி, அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூர் வருவாய் கோட்டங்களில் வருகிற 12-ம் தேதி காலை 11 மணி அளவில் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் சார் ஆட்சியர், சிவகாசி, வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

மேலும், கோட்ட அளவிலான கூட்டத்தில் விவசாய பெருமக்கள் கலந்து கொள்வதுடன், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்களை வருவாய் கோட்டாட்சியர்களிடம் நேரடியாக அளித்து வட்டார அளவிலான விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்களுக்கு விரைந்து தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்கும் விபரத்தினை மனுதாரருக்கு தெரிவித்திட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா அறிவுறுத்தியுள்ளார்.

# தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு நெசவாளர்களுக்கு விழிப்புணர்வு முகாம்

**பரமக்குடி, ஆக. 06-**

1905 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7-ஆம் தேதி தொடங்கப்பட்ட "சுதேசி இயக்கத்தினை" நினைவுகூறும் வகையில், நாடு முழுவதும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வரும் கைத்தறி நெசவாளர்களை கௌரவிக்கும் விதமாகவும், இந்தியாவின் கைத்தறித் தொழிலை முன்னிலைப்படுத்தும் விதமாகவும் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 7-ஆம் தேதி தேசிய கைத்தறி தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் கைத்தறித் தொழிலின் முக்கியத்துவம் மற்றும் தனித்தன்மை, நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியில் கைத்தறித் துறையின் பங்களிப்பு, கைத்தறி தொழிலினை ஊக்குவித்தல் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது.

இது குறித்து கைத்தறி உதவி இயக்குநர் வே.சேரன் உள்ளிட்ட கைத்தறித் துறை அதிகாரிகள் தெரிவித்தாவது, அதன்படி "11-வது தேசிய கைத்தறி தினத்தைக்" கொண்டாடும் விதமாக பரமக்குடி சரகத்தில் 07.08.2025 வியாழக் கிழமையன்று எமனஸ்வரம் சௌராஷ்ட்டிரா பேரவை அரங்கத்தில் சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் நெசவாளர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளது. மேற்படி விழாவிற்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, கைத்தறி நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கவுள்ளார். மேலும், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், பரமக்குடி நகர்மன்ற தலைவர் சேது கருணாநிதி மற்றும் உள்ளூர் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் நெசவாளர்கள் அதிகம் வசிக்கும் பரமக்குடி-எமனேஸ்வரம் பகுதியில் பொது சுகாதாரத் துறையுடன் இணைந்து, பொது மருத்துவம், மகளிர் மருத்துவம், குழந்தைகள் நலம், சித்த மருத்துவம், இரத்த சர்க்கரை அளவு பரிசோதனை மற்றும் நவீன ECG பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் கல்லூரி மாணவியர்களிடையே கைத்தறி ஜவுளி இரகங்கள் / பயன்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கைத்தறி இரகங்களைப் பிரபலப்படுத்தும் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி 06.08.2025 மற்றும் 07.08.2025 "இராமநாதபுரம் மாவட்ட கீழக்கரையில் உள்ள தாசீம்பீவி மகளிர் கலைக் கல்லூரியில்" நடைபெற உள்ளது என கைத்தறித்துறை உதவி இயக்குநர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## ரூ.7.88 கோடி மதிப்பீட்டில்
# அக்னி தீர்த்த கடலில் படகு இல்லம் சுற்றுலா

**ராமேசுவரம், ஆக. 06-**

ரூ.7.88 கோடி மதிப்பீட்டில் ராமேசுவரம் அக்னி தீர்த்தக் கடலில் படகு இல்லம் சுற்றுலா திட்டத்தை அறிமுகப்படுத்த தமிழ்நாடு கடல்சார் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

ராமேசுவரம் ஆன்முக தலமாக மட்டுமின்றி, சிறந்த சுற்றுலா தலமாகவும் மாறி வருகிறது. இங்குள்ள ராமநாத சுவாமி கோயில், பாம்பன் பாலம், தனுஷ்கோடி கடற்கரை, விவேகானந்தர் இல்லம், அப்துல் கலாம் நினைவகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களை காண்பதற்காக ஆண்டுதோறும் 4 கோடி பேர் வருகின்றனர். ராமேசுவரத்துக்கு வரும் பக்தர்கள், சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் கேரளாவைப் போல படகு இல்லம் சுற்றுலாவை அறிமுகப்படுத்த தமிழ்நாடு கடல்சார் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக ராமேசுவரம் அக்னி தீர்த்தக் கடற்கரை அருகே ரூ.7.88 கோடி மதிப்பீட்டில் படகு இல்லம் கட்டப்பட்டு வருகிறது.

ராமேசுவரம் அக்னி தீர்த்த கடற்கரையிலிருந்து கோதண்டராமர் கோயில் வழியாக தனுஷ்கோடி வரையிலும், அக்னி தீர்த்த கடற்கரையிலிருந்து வில்லூண்டி தீர்த்தம் வழியாக பாம்பன் குருசடை தீவு ஆகிய இடங்களுக்கும் முதல் கட்டமாக படகு இல்லம் சுற்றுலா நடத்துவதற்கு கடல்சார் வாரியம் திட்டமிட்டுள்ளது. இந்த படகு இல்லம் சுற்றுலா மூலம் கடல் பரப்பில் காணப்படும் கடல் புறா, கொக்கு, நெடுங்கால் உள்ளான், நத்தைகொத்தி நாரை, கூழைக்கடா, தாரா, கரண்டிவாயன், நீர்க்காகம், பிளமிங்கோ, தேன் பருந்து, கடல்பருந்து உள்ளிட்ட பறவைகளை சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்க முடியும். மேலும், படகின் அடியில் பொருத்தப்படும் கண்ணாடி வழியாக பவளப்பாறைகள், கடல் வாழ் உயிரினங்களை காண முடியும். படகிலேயே இரவில் தங்குவதற்கும், மிதக்கும் உணவகம் ஏற்படுத்தவும் கடல்சார் வாரியம் திட்டமிட்டுள்ளது.

# இசக்கி சுப்பையா-டாக்டர் பா.சரவணன் ஏற்பாட்டில் மடிக்கணினி மற்றும் 1 லட்சம் ரூபாய் உதவித்தொகை
## மாணவருக்கு எடப்பாடி பழனிச்சாமி வழங்கினார்




**திருநெல்வேலி, ஆக 06-**

இசக்கி சுப்பையா -டாக்டர் பா.சரவணன் ஏற்பாட்டில் மடிக்கணினி மற்றும் ரூபாய் ஒரு லட்சம் உதவித் தொகையினை மாணவருக்கு எடப்பாடி பழனிச்சாமி வழங்கினார்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட களக்காடு நகரில் அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிச்சாமியின் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

இதில், அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மருத்துவ கல்வியில் அரசு பள்ளி மாணவர்களுக்கு 7.5% இட ஒதுக்கீடு திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு நீட் தேர்வில் வெற்றி பெற்று மருத்துவ கல்வியில் சேர்ந்துள்ள களக்காடு நகரைச் சேர்ந்த பி. சுதன்அஸ்வின் என்ற மாணவருக்கு அதிமுக மாவட்ட செயலாளர் இசக்கி சுப்பையா எம்.எல்.ஏ, மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் ஆகியோர் ஏற்பாட்டில், நெல்லை மாவட்டக் கழகம் சார்பில் மடிக்கணினி மற்றும் ரூபாய் ஒரு லட்சம் உதவித்தொகை ஆகியவற்றை எடப்பாடி கே.பழனிச்சாமி மாணவருக்கு வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் ரெட்டியார்பட்டி நாராயணன், மருதூர் இராமசுப்பிரமணியன், விஜயநாராயணம் அசோக்குமார், களக்காடு இராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ராமநாதபுரத்தில் 'நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்' முகாம்
## மாற்றுத்திறனாளி நெகிழ்ச்சி



**ராமநாதபுரம், ஆக. 06-**

ராமநாதபுரம் மாவட்டத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் மருத்துவ பரிசோரதனை செய்து கொண்ட மாற்றுத்திறனாளி யாருடைய துணையுமின்றி இந்த முகாமில் எனது மருத்துவ தேதவையை பூர்த்தி செய்து கொண்டதாக மனம் உருக நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தை காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததை தொடர்ந்து, ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் தி.நகர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியில் ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் இராம கருமாணிக்கம் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

பொதுமக்கள் தங்களுடைய உடல் நலனை பேணிக்காக்கும் வகையில் மக்களைத்தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48, வருமுன் காப்போம், இதயம் காப்போம், நடப்போம் நலம்பெறுவோம், மக்களைத்தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களைத் தேடி மருத்துவ திட்டம், சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் என சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

அந்த வகையில் 'நலம் காக்கும் ஸ்டாலின்'' எனும் திட்டம் மக்களைத் தேடி முழு உடல் பரிசோதனை திட்டம் என்கிற வகையில் செயல்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்ததைத்தொடர்ந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் முழு உடல் பரிசோதனை செய்து கொள்வதற்கு தனியார் மருத்துவமனைகளில் ரூ.15ஆயிரம் வரையிலும், அரசு மருத்துவமனைகளில் ரூ.4ஆயிரம் வரை செலவாகும். முழு உடற்பரிசோதனை என்பது இன்றைய காலகட்டத்தில் மக்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும்.

இத்திட்டத்தில் பொது மக்கள் பொது அறுவை சிகிச்சை மருத்துவம், எலும்பியல் மருத்துவம், மகப்பேறுயியல் மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதயவியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்தும் இதில் இடம்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேலும் இந்த முகாமில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு எத்தனை சதவீதம் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை மருத்துவர்கள் மூலம் உரிய பரிசோதனை மேற்கொண்டு அவர்களுக்கு அம்முகாம்களிலேயே மருத்துவச் சான்றிதழ் வழங்கவும் மேலும் புதிதாக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் பதிவு செய்வதற்கும் உரிய வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடைபெற்ற சிறப்பு முகாமில் பங்கேற்று மாற்றுத்திறனாளி அடையாள அட்டை பெற்ற பயனாளி மாவட்ட கலெக்டரிடம் தெரிவித்ததாவது:-

என்னுடைய பெயர் மீனா. எனது சொந்த ஊர் ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் ஆகும். நான் ஒரு மாற்றுத் திறனாளி. பிறர் துணையில்லாமல் என்னால் என்னுடைய அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாது. இதை எண்ணி நான் தினமும் மன வேதனையில் இருந்து வந்தேன். அரசு வழங்கும் சலுகைகள் நானும் பெற வேண்டும் பிறருக்கு தொந்தரவு கொடுக்கக்கூடாது என எண்ணி வாழ்ந்து வந்தேன். இது தொடர்பாக யாரிடம் கேட்பது என்று தெரியாமல் இருந்து வந்தேன்.

இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் நலன் காக்கும் ஸ்டாலின் திட்டத்தினை தொடங்கி வைக்க உள்ளதாக அருகில் வசிப்பவர்கள் மூலம் கேட்டறிந்தேன். மேலும் இம்முகாமில் என்னைப்போன்ற மாற்றுத்திறனாளிகளுக்கு இம்முகாமிலேயே மருத்துவர்கள் மூலம் பரிசோதனை மேற்கொண்டு மருத்துவச்சான்றிதழ் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்கப்படும் என தெரிவித்தார்கள்.

அதனடிப்படையில் மண்டபம் பேரூராட்சிக்குட்பட்ட அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் தொடக்க நாள் நிகழ்ச்சியில் நடைபெற்ற முகாமில் பங்கேற்று மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் மருத்துவர்களிடம் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டேன். என்னை பரிசோதித்த அலுவலர்கள் எனக்கு உடனடியாக மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டையினை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்தார்கள். தற்போது நான் மாற்றுத்திறனாளி அடையாள அட்டை பெற்றுக்கொண்டேன். என்னைப் போன்றவர்களுக்கும் அரசின் திட்டங்கள் தாமதமின்றி கிடைத்திடும் வகையில் செயலாற்றி வரும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு என் சார்பிலும் எனது குடும்பத்தின் சார் பிலும் நஞ் சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.



கொளத்தூரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் கட்டடப்பட்டுள்ள கிளாம்பாக்கம் காவல் நிலையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழினிசாமி நேற்று தேர்தல் பிரச்சாரத்தின் ஒருபகுதியாக தென்காசி மாவட்டத்தில் சுற்றுப்பயணத்தின் போது 7.5 சதவீதம் இட ஒதுக்கீட்டில் மருத்துவ இடம் பெற்ற 4 மாணவர்களுக்கு ஸ்டெதஸ்கோப் வழங்கி வாழ்த்தினார்.

# ரூ.28 கோடி மதிப்பில் நலத்திட்டங்கள்... (1-ம் பக்க தொடர்ச்சி)

கலந்துரையாடினார்.

இக்கூடுதல் பள்ளிக் கட்டிடத்தின் தரைத்தளத்தில் 3 வகுப்பறைகள், ஆய்வகம், தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் அலுவலக அறைகள், முதல் மற்றும் இரண்டாம் தளத்தில் தலா 6 வகுப்பறைகள் மற்றும் ஆய்வக அறை, மூன்றாம் தளத்தில் 3 வகுப்பறைகள், கலையரங்கம் ஆகியவற்றுடன் கூடிய இணைப்புக் கட்டிடம் ஆகியவை கட்டடப்பட்டு உள்ளது.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கொளத்தூரில் 11.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 29,514 சதுர அடி கட்டிட பரப்பளவில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் கட்டடப்பட உள்ள புதிய காவல் துணை ஆணையர் அலுவலகம், பெரவள்ளூர் காவல் நிலையம், சட்டம் ஒழுங்கு பிரிவு, போக்குவரத்து காவல் பிரிவு, சைபர் குற்றப்பிரிவுக் கட்டிடம், கொளத்தூர், ரெட்டேரியில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 1.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன கழிப்பிட வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட பஸ் நிறுத்தம், சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 3.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6-வது மண்டலம்,

70-வது வார்டு, பில்கிங்டன் சாலையில் அமைந்துள்ள ரெயில்வே ஆன்ஸ்லே வாய்க்கால் இருபுறமும் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிகள் மற்றும் மண்டலம்-6ல், 1 கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 69வது வார்டு, ரங்கசாமி தெரு மற்றும் லோகோ ஸ்கீம் 1-வது பிரதான சாலையில் அமைந்துள்ள விளையாட்டு மைதானங்கள் மற்றும் வார்டு-64, 65, 67, 69 ஆகியவற்றில் உள்ள ஒன்பது பூங்காக்களை மேம்படுத்தும் பணிகள் என மொத்தம் 17 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கொளத்தூரில் தனியார் உடற்பயிற்சிக் கூடத்தில் தீ விபத்து ஏற்பட்டதில் சேதமடைந்த இருசக்கர வாகனங்களுக்கு மாற்றாக பாதிக்கப்பட்ட மூன்று நபர்களுக்கு புதிய இருசக்கர வாகனங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா, எம்.எல்.ஏ.க்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மகேஷ்குமார், போலீஸ் டி.ஜி.பி. சங்கர் ஜிவால், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அடையாறு மண்டலம் ராஜா அண்ணாமலைபுரம் நாராயணசாமி தோட்டத்தில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் கட்டடப்பட்ட இரண்டு அங்கன்வாடி குழந்தைகள் மையங்களுடன் கூடிய கூடுதல் பள்ளிக் கட்டிடத்தினை நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், மேயர் ஆர்.பிரியா, மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# 12-வது நாளாக எதிர்க்கட்சிகள் தொடர் அமளி: பார்லி., இரு அவைகளும் ஒத்திவைப்பு

டெல்லி, ஆக. 06-

பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப்பணி தொடர்பாக விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சிகள் தொடர் அமளியால் நேற்றும் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த மாதம் 21ம் தேதி தொடங்கியது. கூட்டத்தொடர் தொடங்கியதுமுதல் பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி ஆகிய விவகாரங்களை விவாதிக்கக்கோரி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இரு அவைகளிலும் அமளியில் ஈடுபட்டு வந்தனர்.

இதையடுத்து, பாராளுமன்றத்தில் ஆபரேஷன் சிந்தூர், பஹல்காம் தாக்குதல் தொடர்பாக விவாதம் நடைபெற்றது. அதேவேளை, பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி தொடர்பாக விவாதிக்கக்கோரி எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இதனால், அவை நடவடிக்கை தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாராளுமன்றத்தின் இரு அவைகளும் 12-வது நாளாக நேற்று காலை 11 மணிக்கு கூடின. அவை கூடியதும் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி தொடர்பாக விவாதிக்கக்கோரி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டனர். இதனால், பாராளுமன்றத்தின் இரு அவைகளும் மதியம் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

# நலம் விசாரித்தவர்களுக்கு நன்றி: முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

சென்னை, ஆக. 06-

நலம் விசாரித்து அன்பைப் பொழிந்த அனைவருக்கும் நன்றி என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஏற்பட்ட லேசான தலைசுற்றலை தொடர்ந்து மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார். இருப்பினும் அரசு பணிகளை தொய்வில்லாமல் மேற்கொண்ட அவர் வீடு திரும்பிய பிறகு கடந்த வாரம் முதல் தலைமைச் செயலகம் சென்று அரசு பணிகளை மேற்கொண்டு வருகிறார். இதனை தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைத்தும், அடிக்கலும் நாட்டினார்.

இதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டு பதிவிட்டுள்ளதாவது:- உடல்நிலை காரணமாகத் தள்ளிப்போன கொளத்தூர் பயணம், நெடுநாள் பிரிந்திருந்த உணர்வைத் தந்தது. அந்த உணர்வு நீங்கி, புது வலிமையைப் பெற்றேன் இன்று (நேற்று).

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில், ரூ.18.26 கோடி செலவில் கட்டடப்பட்டுள்ள காவல் நிலையம், பெரம்பூர், மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.9.74 கோடி செலவில் கட்டடப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டிடம் ஆகியவற்றைத் திறந்து வைத்து, கொளத்தூரில் புதிய காவல் துணை ஆணையர் அலுவலகம், பெரவள்ளூர் காவல் நிலையம், சட்டம் ஒழுங்குப் பிரிவு, போக்குவரத்துக் காவல் பிரிவு, சைபர் குற்றப்பிரிவுக் கட்டிடம், ரெட்டேரியில் ஏ.சி.பேருந்து நிறுத்தம் என ரூ.17.65 கோடி மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினேன். நலம் விசாரித்து அன்பைப் பொழிந்த அனைவருக்கும் நன்றி என்று கூறியுள்ளார்.

# 9 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, ஆக. 06-

தமிழகத்தில் இன்று தேனி, திண்டுக்கல், ஈரோடு உள்ளிட்ட 9 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென் இந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. தெற்கு கேரளா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. ராயலசீமா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, இன்று (ஆக., 06) தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

# ஆபரேஷன் சிந்தூர், மகாதேவ் வெற்றி: பிரதமர் மோடிக்கு எம்.பி.க்கள் பாராட்டு

புதுடெல்லி, ஆக.06-

ஆபரேஷன் சிந்தூர் மற்றும் ஆபரேஷன் மகாதேவ் ஆகியவற்றின் வெற்றிக்காக தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்.பி.க்கள் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடிக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (என்.டி.ஏ.) பாராளுமன்றக் குழுக் கூட்டம் பாராளுமன்ற நூலக கட்டிடத்தில் நேற்று காலை நடைபெற்றது. இந்த கூட்டத்தில், பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மற்றும் தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகளை வேட்டையாடுவதற்கான பாதுகாப்புப் படையின் ஆபரேஷன் மகாதேவ் ஆகியவற்றின் வெற்றிக்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு மாலை அணிவித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது.



மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், பாஜக தேசிய தலைவர் ஜே.பி. நட்டா, பிரஹலாத் ஜோஷி உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள், என்.டி.ஏ. கூட்டணியைச் சேர்ந்த மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பிரதமர் மோடிக்கு வாழ்த்து தெரிவித்தனர்.



சென்னை கிண்டி சிறுவர் பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், இரண்டாவது ஒருங்கிணைந்த நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு திட்ட அறிக்கையினை வெளியிட்டார். இந்நிகழ்வில் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை நந்தனம் ஆவின் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், வழங்கினார்.



மதுரை மாநகர் மாவட்டத்திற்கு வருகை தரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து மேற்கு 3-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் பைக்காரா கருப்புசாமி தலைமையில் அழகப்ப நகரில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இதில் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர். செல்வகுமார், நீதிகாந்த், பைக்காரா முத்துவேல், பழங்காநத்தம் ராஜாராம், வக்கீல் பாலமுருகன், பாலசுப்பிரமணியன், லக்கிமுருகன், டிட்டோ குமார், சி.ஆர்.கதிரவன், லக்கி முனீஸ், ரத்தீஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.